

2018

ISSN: 2012 - 6352 Reg. No.: 187317

# தொண்டன்

சமய – சமூக – இலக்கிய வெளியீடு

செப்டெம்பர் - 2018

வாழும்போது சரியான உணவுகூட
வழங்காமல் போனபிறகு அறுசுவை
உணவைப் படையல் வைப்பதில்
பயன் என்ன
இருக்கிறது?

ஆரம்பம் 1969 பெப்ரவரி

அந்த இரு கரங்களும்
ஆயிரம் வார்த்தைகள் சொல்கின்றன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொண்டன்

செப்டெம்பர் – 2018

மலர் - 50 இதழ் - 08

✤ ஆசிரியர்

அருட்தந்தை. R. பயஸ் பிரசன்னா

✤ இணை ஆசிரியர்

மெற்றில்டா இராஜேந்திரம்

✤ துணை ஆசிரியர்

பெஸ்லியோ வாஸ்

✤ கணினி வடிவமைப்பு

சுபாஜெனி சங்கர்

✤ வெளியீடு

சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு மறைமாவட்டம்.

✤ முகவரி

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். – 44,
மட்டக்களப்பு.

✤ பதிப்பகம்

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.

## உள்ளே...

அன்புடன் உங்களோடு ........................ 01
மட்டுமாநகரிலே விதைக்கப்பட்ட ....... 02
மனித உடல் பற்றி ................................ 04
தீவுத்தோட்டம் ........................................ 05
கடுகுக் கதை ........................................... 07
அன்பின் அரசி அன்னை ........................ 08
மாணவர் பக்கம் ...................................... 09
கிராமத்துக் கீதைமகள் ......................... 10
சின்ன விசயங்கள் சிறந்த ..................... 11
கத்தோலிக்கத் திருமறை ...................... 08
தவறுகளை உணர்ந்து ........................... 09
கல்லாப்பெட்டி ............................................ 10
வினாவிடைப் போட்டி .............................. 11
கத்தோலிக்கத் திருஅவையின் .......... 12
மருத்துவம் ............................................... 14
கலைஞரே கவிவாணரே ...................... 15
மரண தண்டனை நிறைவேற்றும் ....... 16
இலக்கிய மஞ்சரி ...................................... 17
இதுதான்டா அரசியல் ............................ 18
நாம் தூங்கியபின் .................................. 21
எண்ணிப்பார்க்கையில் ......................... 22
வினாவிடை ............................................. 23
அஸ்தமித்துவிட்ட பிள்ளை ................ 24
திருவிவிலியம் கற்போம் ...................... 27
அறிவை வளர்ப்போம் ........................... 28

✷ ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ–ர்) ✷

SOCIAL COMMUNICATIONS CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL : 065 2226486
E-MAIL : battiscc@gmail.com

விலை: : 50/=

ஆண்டுச் சந்தா : 550/=

(தபாற் செலவு உட்பட)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்பனின் உங்களோடு...

## "நம்பினால் நம்புங்கள்"

அன்புக்குரியவர்களே!

கோபம் எதனால் வருகிறது என்று ஒரு ஆராய்ச்சி நடத்தப்பட்டது. பலரும் பல கருத்துகளைத் தெரிவித்தார்கள். ஒருவர் கூறினார், 'நான் பணி புரியும் அலுவலகத்தில் நான் ஒன்று கூறினால் யாரும் கேட்பதில்லை. நான் ஒன்று சொன்னால் அவர்கள் இன்னொன்று செய்கிறார்கள், எனக்குக் கோபம் வந்துவிடுகிறது' என்றார். இன்னொருவர், 'யாரும் என்னைத் தவறாகச் சொன்னா பட்டென்று எனக்குக் கோபம் வந்துவிடும்' என்றார். இன்னுமொருவர், 'நான் செய்யாததை செய்தது என்று யாராவது சொன்னா எனக்குக் கோபம் வரும்' என்கிறார். 'கோபம் வருவதுபோல எதையாவது செய்தா என்ன செய்வன் என்று எனக்கே தெரியாது' என்றார் இன்னுமொருவர். 'நினைத்தது கிடைக்கல்ல அல்லது நடக்கல்ல என்றா சும்மா விடமாட்டன்' என்கிறார் இன்னொருவர்.

இப்படி அடுத்தவர்கள் ஏதாவது செய்தால் எமக்குக் கோபம் ஏற்படுமா? அது சரி நீங்களே ஏதாவது தவறு செய்தால் உங்கள் மீது நீங்கள் கோபப்படுவீர்களா என்று கேட்டால், 'அது எப்படி முடியும், நானே என்மேல் கோபப்படுவதா?' என்று சொல்வோம். கோபம் என்றால் என்ன? அடுத்தவர்கள் செய்யும் பிழைகளுக்கு நாமே நமக்குக் கொடுக்கும் தண்டனை. கோபம் வந்தால் பதட்டம் உண்டாகிறது. அதனால் நமது உடல் நிலைதான் பாதிக்கப்படும். இந்தப் பாதிப்பு நரம்புத் தளர்ச்சி, இரத்த அழுத்தம், நடுக்கம் போன்ற உபாதைகளோடு நிம்மதியையும் இழந்துவிடச் செய்கிறது. கடைசியாக ஒரு மனநோயாளி ஆகிவிடுவோம். இதுதான் உண்மை. இதை நாம் உணருவதில்லை.

அன்பின் வேறு ஒரு வெளிப்பாடுதான் கோபம். கோபம் வருவது போல் நாம் யாரும் நடக்கக்கூடாது. அடுத்தவர்களைக் குறை சொல்லக்கூடாது. எதையும் அடுத்தவர்களிடம் இருந்து எதிர்பார்க்காதீர்கள். யாரிடமும் மன்னிப்பு கேட்க, விட்டுக்கொடுக்கத் தயங்காதீர்கள். நீங்கள் கோபப்படுவதுபோல் அடுத்தவர் நடந்துகொண்டால் அந்த இடத்தை விட்டு விலகிவிடுங்கள். யார் மேல் பிழை இருக்கிறது என்று சிந்தியுங்கள். அடுத்தவர் தவறு செய்தாலும் நீங்கள் நல்லதையே செய்யுங்கள். எதற்குக் கோபப்படுகிறோம்? எதை இழந்துவிட்டோம் என்று கோபப்படுகிறோம். மரணம் மட்டுமே மாபெரும் இழப்பு. மற்ற எல்லாவற்றையுமே நாம் வென்றிடலாம் என்ற முடிவுக்கு வாருங்கள். கோபம் என்கிற கொடிய நோயைப் பரப்பாமல் இருந்தாலே நாம் வாழ்க்கையில் சாதிக்கிறோம் என்றாகிவிடும். தூக்கு மாட்டி இறப்பவன் கூட ஒரு கணம் யோசித்தான் என்றால் தனது முடிவை மாற்றிக்கொள்வான்.

நமக்கு ஆறு அறிவை ஆண்டவர் கொடுத்திருக்கிறார். கோபப்பட அல்ல. சாதிப்பதற்கும், சந்தோஷமாக வாழ்வதற்கும். வாழ்வது இந்தப் பூமியில் ஒருமுறைதான். அந்த வாழ்வைக் கோபப்படாமல் வாழ்ந்துவிட்டுச் செல்லுங்கள்...

ஆண்டவர் ஆசீர்வதிப்பாராக!

- அதிபர் -






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை
ஆயர் - மட்டக்களப்பு மறைமாவட்டம்.

# மட்டுமாநகரிலே விதைக்கப்பட்ட மூன்று அருட்பணியாளர்கள்



**சபை உரையாளர்** கூறுகிறார்:

"உலகில் நடக்கும் உவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒரு காலமுண்டு.
பிறப்புக்கு ஒரு காலம் - இறப்புக்கு ஒரு காலம்
அழுகைக்கு ஒரு காலம் - சிரிப்புக்கு ஒரு காலம் *(3:1)*

■ மனிதர்களாய்ப் பிறந்த நாம் நம் மரணத்தைக் கண்டு அஞ்சு கிறோம்.
மரணம் நம் வாழ்வில் நிகழக்கூடாது என்று எண்ணுகிறோம்.
ஆனால், மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் ஒரு நாள் இறக்க வேண்டும் என்பது **இயற்கையின் நியதி.**

■ **"நாம் பிறப்பதே இறப்பதற்குத் தான்"** என்று சொல்கிறார் தத்துவ ஞானி **மாட்டின் ஹைடகர்.**
அவ்வாறு இருக்க நாம் ஏன் மரணத்தைக் கண்டு அஞ்சுகிறோம்.
மரணத்தோடு நம் வாழ்வு முற்றிலும் முடிந்து விடும் என்று எண்ணுவதால்தான் நாம் மரணத்தைக் கண்டு அஞ்சுகிறோம்.

■ ஆனால், நம் ஆண்டவர் இயேசு மனித னாகப் பிறந்து, மரணத்தை ஏற்று - "எனக்கொரு உடலை நீயே தந்தாய், அதை உனக்கே அளிக்கிறேன்" என்று அர்ப்பணித்து,

**"கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தாலொழிய அது பலன் தராது"** என்ற உயிர்ப்பின் தத்துவத்தை விளக்கி, தம் உயிர்ப்பின் மூலம் அதற்குப் புதிய அர்த் தத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றுள்ளார்.

■ **<u>அதாவது ஒருவன் இறந்தால்தான் உயிர்க்க முடியும்</u>** என்பதை இயேசுவின் மரணம் எடுத்தியம்புகின்றது.

■ இதனை நாம் எவ்வாறு புரிந்துகொள்வது?
**இரவின் மரணத்தில் தான் விடியல் பிறக்கின்றது!
பூவின் மரணத்தில் தான் காய் பிறக்கிறது
சூரியனின் மரணத்தில் தான் நட்சத்திரங்கள் பிறக்கின்றன!
கன்னிமையின் மரணத்தில் தான் தாய்மை பிறக்கின்றது!**
ஆகவே, **மரணம் என்பது முடிவு அல்ல!**
அது **இன்னொன்றின் தொடக்கம்!**

■ மரணத்தினால் வாழ்வு மாறுபடுகிறதே யன்றி அழிக்கப்படுவதில்லை என்பதே திருச் சபையின் போதனை.

■ **பவுல்** அதனை நாம் இலகுவில் புரிந்து கொள்ள உதாரணங்களைத் தருகிறார்.

■ **கூடாரம் - வீடு**
நாம் இப்போது வாழ்வது உடலாகிய கூடாரம். நாம் எதிர்நோக்கியிருப்பது விண்ணுலகின் வீடு. "<u>இக்கூடாரத்தில் குடியிருக்கும் நாம், விண்ணுலகு சார்ந்த வீட்டைப் பெற்றுக்கொள்ள ஏங்கிப் பெருமூச்சு விடுகிறோம்</u>" (2 கொரி 5:2)

■ இயேசுவின் சாவுக்கு முன் - சாவானது இருளானதாகவும், அச்சம் தருவதாகவும், வெளியே வர வழியில்லாத ஒரு குகையாகவும் இருந்தது. ஆனால், அவரது சாவுக்குப் பின் நாம் அவரது உயிர்ப்பின் ஒளியில் இணைந்திட அது ஒரு **வழியாக** மாறியுள்ளது.

■ இயேசு தம்மைச் சாவுக்கு உட்படுத்திய தால், அதை அவர் அழிக்கவில்லை. மாறாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாற்றியுள்ளார்.** ஆகவே, நம் சாவு அர்த்தம் பெற வேண்டுமானால் அதை **மகிழ்ச்சியோடு ஏற்க வேண்டும். அதற்கு இயேசுவில் நம்பிக்கை கொள்ள வேண்டும்.** ஏனென்றால், "என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோவா 11:25) என்று இயேசு கூறியுள்ளார்.

- எனவே, இறப்போடு நமது வாழ்வு முடிந்து விடுகிறது என்று எண்ணி மிகுந்த வேதனைப் படுவதை, கவலைப்படுவதை, கண்ணீர் வடிப் பதை விட்டு விட்டு நமது ஆன்மாவை எப்போ தும் தூயதாய் வைத்திருப்போம்.

■ கிறிஸ்து தம்முடைய மரணத்தால் நம் **மரணத்தை அர்த்தமுள்ளதாக்கியி ருக்கின்றார்.** மரணத்தை **நம்மை இறைவனோடு இணைக்கும் வழி யாக்கியிருக்கின்றார்.**

எனவே, திருத்தூதர் பவுல் சொல்வது போல், "நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே; நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே" (பிலி 1:21) என்று நாம் துணிந்து சொல்ல வேண்டும். இறந்தால் ஆதாயம் என்பது, இறப்புதான் நம்மை இறைவனோடு சேர்க்கும் என்ற நம்பிக்கை, மரணத்தைக் கண்டு அஞ்சாமல், மரணமே எனக்கு நிலை வாழ்வை, நிறை வாழ்வை வழங்கும் வழி என்பதை உணர்ந்து **மரணத்தைக் கொண்டாடுவோம்.**

■ ஆம், நாம் எம்மத்தியில் குருக்களாக பணி வாழ்வை மேற்கொண்டு கொல்லப்பட்ட மூவரின் உயிர்ப்பைக் கொண்டாடுவோம்.

■ அவர்கள்தான் அருட்பணியாளர்களான **சந்திரா பெர்னாண்டோ, ஹெபயார், செல்வராஜ்** ஆகியோர்.

- மூவரும் கடவுளால் முன்குறித்து வைக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டு, அழைக்கப்பட்டு, குருக்களாக அபிஷேகம் பண்ணப்பட்டு, தங்களை அழைத்தவரின் பணிக்காகத் தம்மை முற்றிலும் முழுமையாக அர்ப்பணித்து, இம்மண்ணிலே விதைக்கப்பட்டவர்கள். அவர்கள் வானத்திலிருந்து குதித்து வந்த **சம்மனசுக்கள்** அல்ல. எம்மைப் போன்று சாதாரண குடும்பத்திலேயே பிறந்து, வாழ்ந்து, எம் நாட்டில் இடம்பெற்ற உண்மைக்கும், நீதிக் குமான போராட்டங்களில் கலந்து சொல்லிலும், செயலிலும் ஆண்டவருக்குச் சான்று பகர்வதில் வெட்கமடையாமல் **நம்பிக்கையின் உண்மைக்கு இறப்பினால் சான்று பகர்ந்தார்கள்.**

■ **வீர வரலாற்றுக் காலத்தில்** பெருந் தொகை யான மக்கள் கிறிஸ்துவுக்குச் சான்று பகர வீரச் சாவை ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் சிந்திய இரத்தம் **விசுவாசத்தின் வித்தாக மாறியது.**

- அவ்வகையில் நோக்கும்போது கொல்லப் பட்ட மூன்று அருட்தந்தையர்களும் **வேத சாட்சிகளே.**
- நாம் கொண்டிருக்கும் நம்பிக்கையின் உண்மைக்கு **உன்னத சான்று வேதசாட்சி மரணமாகும்.**

■ **யோபு** கூறுவதைப் போன்று,

"நாம் பிறக்கும்போது எதையும் கொண்டு வரவில்லை. இறக்கும்போது எதையும் கொண்டு செல்வதுமில்லை. இறைவன் தந்தார். அவரே எடுத்துக்கொண்டார்".

- "காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே" என்ற பட்டினத்தாரின் அனுபவத்தைத் தங்கள் அனுபவமாக்கி, போதுமென்ற மனத் துணிவோடு எளிமையாக வாழ்ந்து சான்று பகர்ந்தனர்.
- பொன்னுக்கும் புழுதிக்கும் வேற்றுமை பார்க்காது பற்றற்ற வாழ்வு வாழ்ந்தனர்.
- பிறர்மேல் அக்கறை உடையவர்களாக வாழ்ந்து சான்று பகர்ந்தனர்.
- ஆவிக்குள் வாழ்வு வாழ்ந்தனர்.

இன்றைய பொருளாதார மயமாகிப் போன உலகில் மனித வாழ்வு அர்த்த முள்ளதாக, ஆனந்தமாக வாழப்பட, அடிப்படையான ஓர் இறை நம்பிக்கை **"நாம் உயிர்த்தெழுவோம்"** என்ற நம்பிக்கையே ஆகும்.

அறிஞர் ஒருவரின் கூற்றுப்படி,

'பொருள்' என்ற **கிருமியின் தாக்குதலால் நோய் தொற்றுடன் (infection)** வாழும் மனிதனை வாழ்வின் உண்மையான இலக்கு அறியக்கூடிய குணம் பெற உதவக்கூடிய சரியான **அருள்** எனும் **ஆண்டிபயாட்டிக் உயிர்ப்பு குறித்த நமது விசுவாசமே.**

■ இயேசுவின் பிறப்பு, போதனை, பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகியவை உணர்த்தும் **இறப்புக்குப் பின் நிலைவாழ்வு உண்டு என்ற** →



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உடல் பற்றி வியத்தகு உண்மைகள்!



▪ குழந்தை பிறக்கும் பொழுது அதன் உடலில் 300 எலும்புகள் இருக்கும். ஆனால், வளர்ந்து பெரியவனானதும் மொத்தம் 206 எலும்புகளே இருக்கும்.

▪ நமது உடல் எடையில் 14% எலும்புகளால் ஆனது. நமது உடலில் உறுதியான எலும்பு தொடை எலும்பு. அது கான்கிரீட்டை விட வலிமையானது.

▪ நமது உடல் எடையில் 7% இரத்தம் ஆகும். தினந்தோறும் 450 கலன் இரத்தம் சிறுநீரகத்தால் சுத்தப்படுத்தப்படுகிறது. பெண்களுக்குச் சராசரியாக 4.5 லீட்டர் இரத்தம், ஆண்களுக்கு சராசரியாக 5.6 லீட்டர் இரத்தம் இருக்கும். நமது உடலில் உள்ள இரத்தச் சிவப்பணுக்களின் ஆயுட்காலம் 120 நாட்கள். அதுபோல் ஒவ்வொரு நொடியில் சுமார் இரண்டு மில்லியன் இரத்தச் சிவப்பணுக்கள் நமது உடலில் இறக்கின்றன.

▪ நமது உடலில் உள்ள இரத்த குழாய்களின் நீளம் சுமார் 600,000 மைல்கள். அதாவது இந்தத் தொலைவில் நாம் இரண்டு முறை உலகத்தைச் சுற்றி வந்துவிடலாம்.

▪ நமது கண்களின் எடை சராசரியாக 28 கிராம். நமது கண்களுக்கு 500 விதமான ஒளிகளை பிரித்தறியும் சக்தி யுண்டு. நமது கண்களில் உள்ள கருவிழி மட்டும்தான் இரத்த நாளம் இல்லாத உயிருள்ள திசு. முதல் 8 வாரம்வரை குழந்தைகளின் கண்களில் கண்ணீர் வராது.

▪ மனித இதயம் சராசரியாக ஒரு வருடத்திற்கு 35 மில்லியன் முறை துடிக்கிறது. ஒரு சராசரி வாழ்வில் இதயமானது 2.5 பில்லியன் முறை துடித்து 1 மில்லியன் பேரல் இரத்தத்தை இரத்தக் குழாயில் செலுத்துகிறது. இதயத்தில் உள்ள இரத்த அழுத்தமானது, இரத்தத்தை 30 அடி வரை பீய்ச்சி அடிக்கும் சக்தி கொண்டது.

▪ மனித மூளையில் சுமார் 100,000,000,000 (100 பில்லியன்) நரம்பு செல்கள் உள்ளன. ஒரு மனிதன் 35 வயது அடைந்தது முதல் மூளையில் தினமும் 7000 நரம்பு செல்கள் இறக்கின்றன. நாம் சுவாசிக்கும் மொத்த ஒக்ஸிஜனில் 20% மூளைக்குச் செல்கிறது. நமது மூளை 80% நீரால் ஆனது. நமது மூளையின் செயல்திறன் பகலைவிட இரவில் அதிகமாக இருக்கும்.

▪ நமது உடலில் வேகமாக வளரக்கூடிய திசு முடிதான். மனித தலையில் வேகமாக சராசரியாக 100,000 தலைமுடிகள் இருக்கும்.

▪ பெண்கள் கருத்தரிக்கும்போது கர்ப்பப்பையானது, அதன் சாதாரண நிலையை விட 500 முறை விரிவடைகின்றது. மனித உடலில் உள்ள கல்லீரானது 500 விதமான வேலைகளைச் செய்கிறது.

**மனிதன் உயிரிழந்த பின்பு உறுப்புக்கள் செயலிழக்கும் நேரம் :**

- கண்கள் 31 நிமிடங்கள்
- மூளை 10 நிமிடங்கள்
- கால்கள் 4 மணி நேரம்
- தசைகள் 5 நாட்கள்
- இதயம் சில நிமிடங்கள்



**நம்பிக்கையை,** வீரச்சாவை அரவணைத்த மூன்று குருக்களுக்கும் தந்ததென்றால் நாம் நமது கிறிஸ்தவ வாழ்வை எந்த அளவுக்கு அன்புசெய்து வாழவேண்டும், அன்பைக் கடைப்பிடிப்பதில் எவ்வளவு அக்கறை காட்ட வேண்டும் என்பன போன்ற தெளிவுகளுக்கான ஞானத்தை **தூய ஆவியாரிடம் கேட்போம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சென்ற இதழ்த் தொடர்ச்சி.....

குண்டு மழை வானத்தில் இருந்து பொழிந்தது போதா தென்று ஆமிக்காரனின் துவக்குகளிலிருந்து வெளிப்பட்ட தோட்டாக்கள் ஊரை இரத்தக்களரியாக்குகின்றன. மாண்டவர்கள் போக மற்றவர்கள் உடுத்த உடையோடு உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓட்டமும் நடையுமாகச் சென்று தப்பிப் பிழைக்கின்றனர். இந்த இடப்பெயர்வு, தோட்டத்தை ஆமிக்காரன்களும், ஊரவர் சிலரும் சேர்ந்து பதம் பார்க்க வைத்தது. மரங்கள் அடியோடு வெட்டிச் சாய்க்கப்பட்டன. தேங்காய்களும், இளநீர்களும் தென்னைகளின் கழுத்தில் இருந்து திருகி எடுக்கப்பட்டன. தோட்டம் மயானமானது. இந்தத் துயர நிலையில் சுனாமியும் தனது திருவிளையாட்டை

கண்கள் கலங்கும். மனம் பதை பதைக்கும். வாகரை ஊரின் ஒரு பெரும் உடைமை மாற்றான் ஒருவனின் கைகளுக்கு மாறலாமா? இந்தக் கேள்விக்கு அவனால் பதில் சொல்ல முடியவில்லை. தன்மானமிக்க அவன் தனக்குள் புலம்பினான், குழம்பினான்.

அவனுடைய புலம்பல் யாருடைய காதிலும் விழவே யில்லை. விசரன்.... சும்மா கிடந்து உளறுகின்றான்.... அபிவிருத்தி செய்யமுடியாத தோட்டத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வது? பங்குப் பொருள் இப்ப டித்தான் பாழாகும். இது தெரியாதா? பெரிசாப் படிச்ச வனாம்.... அவனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.... இப்படி ஏகப்பட்ட விமரிசனங்களள்... சொல் அம்புகள் அவனை நோக்கிப் பாய்ந்தன.

# தீவுத்தோட்டம்!

(வரலாறு தழுவிய சிறுகதை)



- வாகரைவாணனன்

நடத்தவே தீவுத்தோட்டம் நீருக்குள் போய்ப் பதுங்கிக் கொள்கிறது. தோட்டம் நீருக்குள் பதுங்கியதுபோல ஊர் மக்கள் சிலரின் உடம்புகளும் அந்த நீரோடு சங்கமமானதை என்னவென்று சொல்வது? பட்ட காலிலேயேபடும் என்று சொல்வார்களே அப்படித்தான் வாகரை மீதும் தொடர்ந்து அடி விழுந்து கொண்டே இருந்தது.

தீவுத்தோட்டத்தின் இந்த அமங்கல வரலாறுதான் அதனை ஒரு வியாபாரப் பண்டமாக்கி அந்நியன் ஒருவனிடம் அது செல்ல வழிவகுத்தது. இதை நினைக்கும்போதெல்லாம் உடையாரின் பேரன் ஒருவனின்

இந்தச் சமயத்தில்தான் பாட்டன் உடையாரின் கம்பீரமான தோற்றம் அன்றிரவு அவன் கனவில் தோன்றியது. அவன் உண்மையிலேயே பிரமித்துப் போனான். அப்பெரியார் இயற்கை எய்தி எழுபது ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. அவர் கட்டி எழுப்பிய அறிவுக் கோயிலும், ஆண்டவன் கோயிலும் சுனாமியால் சூனியமாக்கப்பட்டுவிட்டன. இப்போது இதுவும் இப்படியா? என்று எண்ணி அவன் கலங்கிக் கொண்டிருந்த நேரத்தில் அவரது தோற்றம் பிரமிப்பு ஊட்டாமல் இருக்குமா என்ன?

பேரனின் மனநிலையை அறிந்த அவர் மெத்தப் பரிவோடு சொல்கிறார்... "நீ கவலைப்படாதே... சின்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதில் இருந்தே உன்னை எனக்கு நல்லாகத் தெரியும்... அந்தக் காலத்தில் வேப்பெண்ணெய் வடிக்கக் கொடுப்பதற்காக எனக்கு வேப்பங் கொட்டை பொறுக்கித் தந்தவர்களில் நீ முதல் ஆள். கெட்டிக்காரன் நீ.... தோட்டம் முழுவதும் உன் கையில் இருந்திருந்தால் அதை நீ இந்திரலோகமாக்கியிருப்பாய்.... என்ன செய்வது? நடந்தது நடந்துவிட்டது. அதை மறந்து விடு...." என்று கூறி மறைந்துவிடுகின்றார். உடனே கண் விழித்துக்கொண்ட அவனுக்குப் பாட்டனாரின் அந்தப் பரிவான வார்த்தைகள் கடற்கரைத் தாழம் பூவாசமாகக் கமழ்கின்றன. அவன் அதில் மூழ்கிப் போகின்றான்.

**நிறைவு**




*தீமைகள் ஆற்றாமல் இருப்பது நல்லது, ஆனால், நன்மைகளையும் ஆற்றாமல் இருப்பது தீயது என்கிறார் திருத்தந்தை. உண்மைக் கிறிஸ்தவராக இருப்பது என்பது, தீமையை ஆற்றாமல் இருப்பது மட்டுமல்ல, மாறாக, நன்மையை ஆற்றும் அதேவேளை, தீமையை உயிரோட்டமாக எதிர்ப்பதும் ஆகும் எனக் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.*

*கிறிஸ்தவர்கள் என்பவர்கள், எவரையும் பகைக்காமல் இருந்து மன்னிக்கவும், பகை உணர்வுகளை மனதிற்குள் வளர்க்காமல் எதிரிகளுக்காகச் செபிக்கவும், பிரிவினைகளுக்கு காரணமாகாமல் அமைதியைக் கொணரவும் உழைக்க வேண்டியவர்கள் என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், எல்லாவற்றிற்கும் மேலாக, பிறரைப் பற்றி மற்றவர் அவதூறாகப் பேசும்போது அங்கு தலையிட்டு தடுக்கவும், மற்றவர்களைப் பற்றி அவதூறாகப் பேசாமல் இருக்கவும் வேண்டியவர்கள் நாம், என மேலும் உரைத்தார்.*

*தீமைகளை நன்மைகளால் எதிர்க்கும் வீரமான கிறிஸ்தவர்கள் இல்லாதபோது, தீமைகள் வளர்கின்றன, ஏனெனில், நமது மௌனம் வழியாக நாம் அதற்கு உரமளிக்கிறோம் என மேலும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.*




ஒரு நாள் பள்ளியிலிருந்து வந்த தோமஸ் அல்வா எடிசன் கையில் ஒரு கவரில் உள்ள கடிதத்தை தன் அம்மாவிடம் மட்டுமே கொடுக்கவேண்டும் எனத் தன் ஆசிரியர் கூறியதாகச் சொல்லிக் கொடுத்தான்.

அந்தக் கடிதத்தை அந்தத் தாய் கண்ணீரோடு சத்தமாக தன் மகன் கேட்கும்படிப் படித்தாள் :

"உங்கள் மகனின் அறிவுத்திறமைக்கு முன் எங்கள் பள்ளி மிகவும் சிறியது. அவனுக்குக் கற்பிக்கத் திறமையான ஆசிரியர்கள் எங்களிடமில்லை. அதனால், தயவு செய்து நீங்களே உங்கள் மகனுக்குக் கற்பிப்பது நல்லது" என்று.

பல ஆண்டுகளுக்குப் பிறகு எடிசனின் தாயாரும் காலமாகிவிட்டார். எடிசனும் அந்த நூற்றாண்டின் சிறந்த ஆராய்ச்சியாளராகவும் கண்டுபிடிப்பாளராகவும் ஆனார்..!

இப்படி இருக்கையில் ஒருநாள் தனது வீட்டின் பழைய சாமான்களை எடுத்துவைத்துக்கொண்டிருந்தபோது அவர் தன் அம்மாவிடம் முன்பொருமுறை பள்ளியிலிருந்து கொண்டுவந்து கொடுத்த கடிதம் எதேச்சையாகக் கண்ணில் பட அதை எடுத்துப் படித்துப் பார்த்தார்"

அதில் இப்படி எழுதியிருந்தது.

"மூளை வளர்ச்சி குன்றிய உங்கள் மகனை இனிமேல் எங்கள் பள்ளிக்கு நீங்கள் அனுப்பவேண்டாம்" என்று.

இதைப்படித்த எடிசன் கதறி அழுதார். பின் அவரது டயரியில் கீழ்க்கண்டவாறு எழுதினார், "மூளை வளர்ச்சியற்ற தோமஸ் அல்வா எடிசன் தனது தாயாலேயே மாபெரும் கண்டுபிடிப்பாளனானான்" என்று.

பிள்ளைகள் மீதான "உயர்வான எண்ணங்கள்" அவர்களை மிக உயரத்துக்குக் கொண்டு செல்லும்..!

குழந்தைகள் மனதில்
தன்னம்பிக்கையை
விதைப்போம்..






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சிலுவை!

## கடுகுக்கதை - 91

அன்ரன் உணவு இடைவேளையின் போது நண்பர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தார். அப்போது வைத்தியசாலைகள் தொடர்பான உரையாடல் ஆரமம்பமானது.

இஸ்மாயில் சொன்னார்.....
"அவசரத்திற்கு பிறைவேற் ஆஸ்பத்திரிக்கு ஆக்கள கொண்டுபோனா, அங்க அட்மிட் பண்ணிப்போட்டு கடைசியில ஏலாக்கட்டத்தில பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு போகச் சொல்றாங்க...."

"அதெண்டா உண்மதான்.... ஆனா ஒரு வசதி... எல்லாரும் நிக்கலாம். வருத்தக்காரன எப்பயும் போய்ப் பார்க்கலாம்....." என்று தணிகாசலம் சொன்னார்.

ஆஸ்பத்திரிகள், அம்புலன்ஸ் வாகனங்கள் எல்லாத்திற்கும் சிவப்புச் சிலுவை அடையாளம் போட்டிருக்காங்க. முஸ்லிம் நாடுகளில் சிலுவைக்குப் பதிலாக சிவப்பு பிறை அடையாளம் போடுவாங்க... ஆனா இங்க பாமசிகளிலயும் செஞ்சிலுவை அடையாளம் போட்டிருக்காங்க, இது விதி முறைகளை மீறின விஷயம்...." என்றார் அன்ரன்.

உடனே, "டாக்குத்தர்மார் பச்சைச் சிலுவை அடையாளம் போட்ட வாகனம் ஓடுறாங்க.... ஆனா நம்மட சில அரசாங்க ஆஸ்பத்திரி களில கணக்கு வழக்கு பார்க்கிறவங்களும், வேற வேல செய்யிற வங்களும் வாகனத்திலும், மோட்ட சைக்கிள்களிலும் செஞ்சிலுவை அடையாள ஸ்ரிக்கர் ஒட்டித் திரியிறாங்க.... சரியான பிழ...." என்றார் இஸ்மாயில்.

- பற்றி -






## திருப்பலியில் விண்ணகத்தின் முன்சுவை...

திருப்பலிக்குச் செல்வதும், திருநற்கருணை வாங்குவதும் மிகவும் முக்கியமானது. ஏனெனில், திருநற்கருணை வாங்குகையில், நம் மனதை மாற்றி, விண்ணகத்திற்கு நம்மைத் தயாரிக்கும் உயிருள்ள கிறிஸ்துவை உட்கொள்கிறோம் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார். மேலும், நான் கொடுக்கும் உணவு என் சதையே, அதை உலகு வாழ்வதற்காகவே கொடுக்கிறேன் என்றும், மானிட மகனுடைய சதையை உண்டு அவருடைய இரத்தத்தைக் குடித்தாலொழிய நீங்கள் வாழ்வு அடையமாட்டீர்கள் என்றும் இயேசு கூறிய வேளையில், அவரோடு ஒன்றித்திருக்கவும், அவரை உண்டு, அவரோடு பகிர்ந்து வாழவும், இயேசு தங்களை அழைக்கிறார் என, மக்கள் புரிந்துகொண்டனர் என்றுரைத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

கிறிஸ்துவின் திருஉடலும், திருஇரத்தமுமாகிய இந்த வாழ்வு தரும் உணவு, திருநற்கருணை விருந்தில், நம்மிடம் இலவசமாக வருகின்றது என்று கூறிய திருத்தந்தை, நாம் திருப்பலியில் பங்குகொள்ளும் ஒவ்வொரு நேரமும், விண்ணகத்தை ஏற்கனவே, இம்மண்ணகத்தில் அனுபவிக்கின்றோம் என்று கூறினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் அரசி

# அன்னை திரேசா!





- வாகரைவாணன் -

தொடர் - 1

### குடும்பம் ஒரு கோயில்

அல்பேனியா
யூகொஸ்லாவியாவின்
ஓர் அங்கம்
அது தான்
அன்னை திரேசாவின்
அவதார பூமி.

கிழக்கு
ஐரோப்பிய நாடுகளில்
இது ஒரு
கீற்று நிலா
விளக்கு ஒன்றின்
வீடு.

தந்தை நீக்கிலா
பெரிய தனவந்தர்
வர்த்தகத்தால்
பொருள்
வளர்த்தவர்.

எகிப்து வரை
வணிகம்
எட்டி நடந்தது
துகிலும்
தொல் பொருட்களும்
செல்வத்தைத்
துலக்கி நின்றன.

வள்ளல் நீக்கிலாவின்
வாயில் கதவு
எப்போதும்
வரவேற்றும்.

அநாதைகளுக்கும்
அகதிகளுக்கும்
அவர்தான்அடைக்கலம்.

நெஞ்சில் இரக்கம்
நிறைந்து வழியும்.

தெய்வபக்தி
தாய் திரானாவின்
திரவியம்!
இதனால்
வையம் அவளை
வணங்கியது.

அடக்கம், பணிவு
அந்தத் தாயின்
ஆபரணங்கள்.
அள்ளிக் கொடுக்கும்
கைகள்
அதற்கு மட்டும்
குறைவே இல்லை!

கணவன் குழந்தைகள்
திரானாவின் கண்கள்
துணைவி அவள்
தொழில் தொண்டு
ஒன்று தான்!

அளந்து பேசுதல்
அவளது அழகு
வளர்ந்த ஞானம்
வார்த்தையில்
வாழும்.

குடும்பம் இதனால்
கோயிலானது!

இந்தக் கோயிலில்
மூன்று
குழந்தைத்
தெய்வங்கள்
அதில்
அக்னஸ் தான்
கடைக் குட்டி!
அன்னை திரேசாவின்
ஆரம்பப் பெயர்
அதுவே!

அக்னசுக்கு
ஓர் அண்ணன்
ஓர் அக்கா
சோதர அன்பில்
குடும்பம்
சொர்க்கமாகும்!

முத்துப் போல்
மூவரும்
மூன்றாவது மகள்
அக்னசை
மொட்டு என்பர்.

மாளிகை போல
மனை
சுற்றி வர
மரம் செடிகொடி
சூழல்
சுகத்தை அள்ளிச்
சொரிந்தது.

ஓடி ஒளித்து
விளையாடி
கூடி இருந்து
கதை பேசி
குறும்புகள் செய்து
பிள்ளைச் செல்வங்கள்
மகிழ்தல் கண்டு
பெற்றவள் உள்ளம்
பேரின்பம் அடையும்!

ஆனந்த வெள்ளத்தில்
வீடு அசைந்தது
ஒரு
படகு போல.

தந்தை
கண்டிப்பானவர்
ஆனாலும்
தாராள உள்ளம்
தயை இரக்கம்
அவரது
தனித்துவம்!

- தொடரும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவம்

# மாணவர் பக்கம்






- நில்மினி கஜேந்திரன் -

### பொதுநிலையினரின் மறைத்தூதுப் பணி:

2ம் வத்திக்கான் சங்கம் வெளியிட்டுள்ள "பொதுநிலையினரின் மறைத்தூதுப் பணி" எனும் விதித் தொகுப்பு ஏட்டில், திருச்சபையில் திருமுழுக்கு வழியாக இறைமக்களென்னும் அங்கத்துவத்தைப் பெற்றுள்ள பொதுநிலையினரின் இடத்தை அவர்களுக்களித்து, அவர்கள் இன்றைய உலகில், சமூகத்தில் ஆற்ற வேண்டிய பணி, பொறுப்புகளைப் பற்றித் தெளிவாக விளக்குகிறது. துறவறத்தையும், குருத்துவத்தையும் பெறாத அனைவரும் பொதுநிலையினர் எனும் பாரம்பரிய வரைவிலக்கணத்தைக் கடந்து சென்று, திருமுழுக்கின் வழியாக, இறைமக்கள் எனும் அங்கத்துவத்தைப் பெறுகின்ற பொதுநிலையினர், கிறிஸ்துவின் அரச, குருத்துவ, இறைவாக்கு எனும் முப்பணியில் பங்குபற்றித் திருச்சபையிலும், உலகிலும் பணியாற்றுவோர் எனும் வரைவிலக்கணத்தை முன்வைக்கின்றது. எனவே, திருத்தூதுப் பணிக்குப் பொதுநிலையினர் அழைப்புப் பெற்றுள்ளனர். இவ்வழைப்பு மூலம் அருட்பணியிலே தமக்கே உரிய அருள்நெறியோடு பங்கு கொள்கின்றனர். இறைமக்கள் சமூகத்தில் பொது நிலையினரும், அருட்பணியாளரும் உள்ளடக்கப்படுகின்றனர். இவர்கள் இணைந்தே கிறிஸ்துவின் உடலில் உயிருள்ள உறுப்பினர்கள் எனும் முறையில் அனைவரும் தம் திறன்கள், ஆற்றல்கள் அனைத்தையும், பயன்படுத்தித் திருச்சபையை வளர்ச்சியுறச் செய்யவும், தூய தன்மையுடன் பொலிவுறச் செய்யவும் அழைக்கின்றனர்.

அருட்பணியாளரின் பணித்தளம் ஆலயம். ஆனால், பொதுநிலையினரின் பணித்தளம் பரந்த உலகம். அவர்கள் பணி புரியும் இடங்கள், தொழிலாற்றும் தொழிற்சாலைகள்,மருத்துவம் செய்யும் மருத்துவமனைகள் அனைத்திலும் "பொதுநிலையினர் உலகியல் அமைப்பைப் புதுப்பிப்பதைத் தமக்கே உரித்தான கடமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும்".

வத்திக்கான் சங்கத்தின் படிப்பினையின் பின்னர் இலங்கைத் திருச்சபையின் பொது நிலையினரின் பங்களிப்பும், மறைத்தூதுப் பணியும் முன்னரைவிட மிக வளர்ச்சி கண்டிருக்கின்றன. திருச்சபை வாழ்விலும், உலகிலும் பொது நிலையினரின் செயற்பாடுகள், பல்வேறு பணிகளிலும், சந்தர்ப்பங்களிலும் காணக்கூடியதாயிருக்கின்றன. அரசியல் துறை, நிர்வாகத் துறை, வைத்தியத்துறை, சட்டத்துறை, தொழில்நுட்பத்துறை, விஞ்ஞானத்துறை எனப் பலதரப்பட்ட துறைகளிலும், அவர்கள் ஈடுபட்டு, புளிப்புமா போல் செயற்பட்டு, கிறிஸ்தவ விழுமியங்கள், படிப்பினைகளைப் பரப்பி வருகின்றனர். பங்குகளில் காணப்படும் பல்வேறு பக்திச் சபைகளில் பெருமளவில் இணைந்து திருச்சபையின் வளர்ச்சிக்காகச் செயற்பட்டும் வருகின்றனர். திருச்சபையில் அதிகமானோர் பொதுநிலையினராய் இருப்பதால், திருச்சபையின் புதிய உதயத்திற்குச் செயற்படுவதில் இவர்களுக்கே பெரும் பங்குண்டு. ●●●




**ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன் ஆவான்**


**விளக்கம் : ஆயிரம் வேரைக் கொண்டவன் அரை வைத்தியன் ஆவான்.**

**நோயைப் போக்க ஆயிரம் வேரைக் கொண்டு மருந்து கொடுப்பவன் அரை வைத்தியன் ஆவான் என்பதே பொருள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமத்துக் கீதைமகள்!



அருட்பாவலர் நிலாதமிழின்தாசன்

தலையினிலே நெல்லுப்பெட்டி சுமந்துநடப்பாள்
தன்கணவன் வரவையெதிர் பார்த்துக் கிடப்பாள்
இலையினிலே சோறுகட்டிக் கொண்டு கொடுப்பாள்
ஏழைமகள் வயற்காட்டில் சேர்ந்து உழைப்பாள்

கணவனொடுங் கை கோர்த்துப் பயிரை வளர்ப்பாள்
கண்ணின் மணி போலதனைக் காவல் புரிவாள்
கணவனையே தனதுஉயிர் என்று மதிப்பாள்
கடவுளுக்கு நன்றிசொல்லித் தினமுந் துதிப்பாள்

பிள்ளைகுட்டி பெற்று மகிழ்வோடு உயிர்ப்பாள்
பிரியமுடனுணவுதனை ஊட்டி வளர்ப்பாள்
தெள்ளுதமிழில் தாலாட்டுப் பாடல் இசைப்பாள்
தேன்மொழி எங்கள் தாய்த் தமிழென்று உரைப்பாள்

பஞ்சம் பசி வந்தபோதும் சோம்பிக் கிடவாள்
பசியை ஆற்றக் கஞ்சியேனும் காய்ச்சிக் கொடுப்பாள்
நெஞ்சில் துயர் சூழ்ந்தபோதும் மறந்து சிரிப்பாள்
நிமிர்வினோடு வறுமைமாற்றத் துணிந்து உழைப்பாள்

கிராமத்து வாழ்க்கையிலே செழுமை இருக்கும்
கீதைபோல உள்ளமெலாம் ஞானம் இருக்கும்
திராய், குப்பைக் கீரையொடும் சோறு ருசிக்கும்
தின்னத்தரும் கிராமத்து ஏழைமகள் நெஞ்சை நிறைப்பாள்



## தகவல்கள்!



**செவ்வகந்திப்பூ, செவ்வந்தி, சாமந்தி** - Chrysanthemum indicum

உடற்சூடு, மூக்கிலிருந்து இரத்தம் வடிதல் போன்ற நோய்களைக் குணமாக்கும். காய்ந்த மஞ்சள் சாமந்திப் பூவை தேங்காய் எண்ணெயுடன் சேர்க்கவும், பின்பு அதை வடிகட்டவும், வடி கட்டின சாறை 3 நாட்களுக்கு பிறகு தலையில் தடவி வந்தால் மூளை மற்றும் தலை குளிர்ச்சி பெறும்.



**வாகைப்பூ - உழிஞ்சில்** - Sirissa - Mimosa Flexuosa

வாகைப்பூ கசப்புச் சுவையுடையது. ஆயினும் சூட்டை நீக்கும். மஞ்சள், சந்தனம், வாகை, புளியாரைச்செடி ஆகியவற்றை சிறிது தண்ணீர் சேர்த்து அரைத்து முகத்தில் அழுத்தித் தடவி வர முகத்தில் உள்ள பரு குறையும்.




**தூதுளம் பூ, தூதுவளை** - Solanum Trilubatum

தூதுளம் பூவினால் உடல் மிக்க பலம் பெறும். ஆண்களுக்கு விந்து பெருக்கத்தை அதிகரிக்கும், உடல் அழகு பெறும். தூதுளம் பழத்தை அப்படியே 4 அல்லது 5 தினம் சாப்பிடக் காச நோய் தணியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**கற்பனையில் காணுங்கள் :**

ஓர் எளிய மனிதர் எதிர்பாராதவிதமாக மக்கள் செல்வாக்குப் பெற்று தேர்தலில் ஜெயித்து அமைச்சரும் ஆனார். "இப்படியொரு நிலைக்கு வருவதாகக் கற்பனைகூட செய்திருக்கமாட்டீர்களே" என்று செய்தியாளர்கள் கேட்டார்கள். "கற்பனை செய்ததால்தான் இந்த நிலைக்கு வந்தேன். நான் பொது வாழ்வில் இறங்கும்போது எத்தனையோ ஏளனங்கள் இருந்தாலும் அடுத்த ஐந்தாண்டுகளில் என் செல்வாக்கு வளர்வதாக, ஐந்தாண்டுகளுக்கு முன் கற்பனை செய்தேன். அது தந்த உற்சாகத்தில் களத்திலிறங்கினேன்" என்றார். உங்கள் இலட்சியங்களைக் கற்பனையில் காணுங்கள். பிறகு எட்டிப் பிடியுங்கள்.

**கூர்ந்து கவனி :**

வாழ்வில் பலவித இன்னல்களுக்கு ஆளான இளைஞன் தீர்வுகள் கேட்டுத் தெய்வத்திடம் முறையிட்டான். விடைகள் கிடைத்தபாடில்லை. தன் குருவிடம் முறையிட்டான். குரு ஏதோ பதில் சொன்னார். காதில் விழவில்லை. நெருங்கி அமர்ந்தான். குரு மீண்டும் ஏதோ சொன்னார். காதில் விழவில்லை. இன்னும் நெருங்கினான். குரு மறுபடியும் சொன்னார். இம்முறை காதில் விழுந்தது. "கடவுள் சில சமயம் தீர்வுகளை முணுமுணுப்பார். கூர்ந்து கவனி" பதட்டமின்றி வாழ்வை உற்றுப் பார்த்தான். வெற்றிகள் சேர்த்தான்.

- ஜே.எச்.இரத்தினராஜா -

## வினா விடைப் போட்டி - இல 04

**சரியான விடைகள்**

1. " ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே; இன்று அக்களிப்போம்; அகமகிழ்வோம்".
2. திருத்தந்தை பிரான்சிஸ்
3. மட்டக்களப்பின் நகரினை அண்டிய பிரதேசங்கள்
4. 27.03.2010 இல்
5. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்
6. லூயிஸ் இரஃபேல் சாக்கோ
7. S.W.R.D. பண்டாரநாயக்கா
8. ஏப்ரல் 11, 1963, திருத்தந்தை 23ம் ஜோன் (அருளப்பர்)
9. "கியூபா ஏவுகணை நெருக்கடி"
10. 1970

**சரியான விடைகள் எழுதி 500/= பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:**

M. சில்வெஸ்டர்,
இல. 525/8, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

திருமதி. பீ.ஐ. கைடி பொன்கலன்,
இல. 24/11, 1ம் குறுக்கு,
செல்வநாயகம் வீதி,
மட்டக்களப்பு.

செல்வராஜா தேவதர்ஷனா,
இல. 16, பிரதான வீதி,
பெரிய கல்லாறு - 02, கல்லாறு.

**காவல் காக்கும் தோட்டமெனும் உன் ஆன்மாவை**
**அயலவன் சதி பறித்தல் என்பது முடியுமோ?**
**உன் வாழ்வில் நன்மை தீமை பகுத்தறிந்து**
**சொர்க்கம் சேர்வது உன் கையில் தானே!**

சிந்திக்க சில வரிகள்... 29

– ராஜ் –



**உ**லகில் நீங்கள் கேட்க விரும்பும் எந்த ஒன்றைக் குறித்தும் உங்களில் இருவரிடையே ஒற்றுமை ஏற்படுமானால், பரலோகத்திலிருக்கும் எமது பிதாவால் அது நிறைவேற்றி வைக்கப்படும். - **இயேசு**

■ ■ ■

எப்பொழுதும் நீ உனக்கும் பகைச் சக்திகளுக்கும் இடையில் இறைவனை வைப்பாயானால் அவற்றால் உனக்குத் தீங்கிழைக்க முடியாது. ஆழ்ந்து நோக்கும்போது இறைவனது அருளில் பரிபூரண நம்பிக்கை வைப்பதே மிகச் சிறந்த ஞானம் என்பது புலனாகும். - **இந்து மதம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கத்தோலிக்க திருஅவையின் சமூகப் படிப்பினைகள்


-- ஒரு குறும்பார்வை

அருட்பணி அ. அ. நவரெத்தினம் (நவாஜி)
சிரேஷ்ட விரிவுரையாளர்.
கிழக்குப் பல்கலைக்கழகம். இலங்கை.

சென்ற மாத தொடர்ச்சி...

**17. மகிழ்வின் நற்செய்தி** (Evangelii Gaudium) நவம்பர் 24, 2013

இன்றைய திருச்சபையின் திருத்தந்தை பிரான்சிஸ் ஐரோப் பாவிற்கு வெளியிலிருந்து வந்த முதற் திருத்தந்தையாவர். இவர் தமது பணித்தளமாகிய தென் அமெரிக் காவின் சமூக அநீதிகளுக்கு மத்தி யில் சிறப்புப் பணியாற்றியவர். திருச்சபையின் சமூகப் போத னையின் வீச்சினை நன்கு அறிந்தவர், வாழ்ந்தவர். இவர் திருதந்தையாக மார்ச் 13, 2013இல் தெரிவு செய் யப்பட்டார். அவரது திருச்சபை குறித்த சிந்தனையோட்டமானது "திருஅவை ஏழையரின் அவை யாக இருந்து அவர்களின் நலனுக்காகத் தன்னை அர்ப்பணிக்க வேண்டும்" (Church of the poor, for the poor) என்பதாகும்.




இவர் வெளியிட்ட முதல் ஏடானது மகிழ்வின் நற்செய்தி எனும் மறைத்தூது ஊக்கவுரையாகும். கிறிஸ்து எனும் நற்செய்தி மகிழ்வுக்குரியதாகும். அதனை அறிவிப்போர் தங்களது சோகங்களை மறந்து மகிழ்வுடன் அதனை அறிவிக்க வேண்டும். அவர்கள் முகமலர்ச்சியோடு தூது செல்லும் சீடர்களாக (missionary disciples) மக்களை அணுக வேண்டும்.

இவ்வேட்டின் இரண்டாம், நான்காம் அத்தி யாங்களில் திருஅவையின் சமூகப் போதனைகள் விளக்கப்படுகின்றன. சமூகநீதிப் பார்வையானது நற்செய்தி அறிவிப்பின் இன்றியமையாத அங்க மாகும். யாரையும் சமூகத்தில் ஒதுக்கி வைக்க முடியாது. அனைவருக்கும் எல்லாம் கிடைக்கும் வண்ணம் அனைத்தும் அனைவருடனும் பகிரப்பட வேண்டும். நீதிகோரி குரலெழுப்புவோரின் குரலுக்கு திருஅவை செவிசாய்க்க வேண்டும் (எண்கள் 187 – 196). இதைவிட காலமென்பது இடத்தினைவிட பரந்தது. ஒற்றுமையென்பது போராட்டத்தைவிடச் சிறந்தது, யதார்த்தம் என்பது கருத்தியல்களைவிட மேலானது போன்ற தத்துவார்த்துவ கருத்துக்களினூடே சமூகநீதியினை எடுத்தியம்புகின்றார்..

**18. இறைவா உமக்கே புகழ்** (Laudato Si) மே 25, 2015

'இறைவா உமக்கே புகழ்' எனும் சுற்றுமடலானது இன்றைய நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்ட முதலாவது சமூகப்போதனை மடலாகும். இம்மடலில் திருத்தந்தையவர்கள் இன்றைய உலகினை அதிகம் பாதிக்கின்ற விடயமாகிய சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து கலந்துரையாடி, தீர்க்கமான முடிவுகளை முன்வைத்துள்ளார். இம்மடலானது மே 24, 2015இல் வெளியிடப்பட்டது.

இம்மடலின் பிரதான கருப்பொருளாக அமைவது இறைவன் மனிதர்களாகிய நம்மி டம் ஒப்படைத்துள்ள படைப்புலகத்தை, குறிப் பாக நாம் வாழ்கின்ற பொது இல்லமாகிய பூவுலகத்தை பொறுப்போடு பேணிக்காக்க வேண்டுமென்பதாகும். இம்மடலானது திரு அவையின் சமூகப் போதனைகளுள் ஒன்றாகக் கருதப்படுமென திருத்தந்தையவர்கள் எண் 15 இல் குறிப்பிடுகின்றார்.


- சுற்றுச்சூழல் பாதுகாப்பு, காலநிலை மாற்றம் (climate change) போன்ற விடயங்கள் வெறுமனே அரசியல், அறிவியல், பொருளாதாரம் போன்ற வெளிகளில் மாத்திரம் விவா திக்கப்படாமல் ஆன்மீக, சமய நம் பிக்கை வெளியிலும் விவாதிக்கப்பட வேண்டுமென்கிறார்.

- சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் போன்ற பாதிப்புக்களினால் உலகின் எல்லா மாந்தரும் பாதிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டாலும், ஏழைகளும், வறிய நாடுகளும் அதிக மாகப் பாதிப்புக்குள்ளாகின்றன. இவ்வுலகின் நலன் கள் ஒருசிலருக்கு மாத்திரமன்றி அனைத்து மாந்தருக்கும் பயன்பட வேண்டுமென்பதில் நற்செய்தி நூல்களும், திருஅவையின் படிப்பி னைகளும் கருத்தாய் உள்ளன. ஏழையரின் மாண்பானது அனைவராலும் மதிக்கப்பட வேண்டும் (எண் 158).




■ மனித முன்னேற்றமென்பது பொருட்களாலும், செல்வங்க ளாலும் வந்துவிடுவதில்லை. அறிவியலும், தொழில்நுட்ப வியலும் தமது கண்டுபிடிப் புக்களால் மாத்திரம் உலகினை முன்னேற்றலாம் என்பது தவறான கண்ணோட்டமாகும். அள வுக்கு மிஞ்சிய நுகர்வுக் கலாசாரம் நம்மை இறைவனிடமிருந்து பிரித்து விடக்கூடாது. குறைவான, அளவான செல்வமே நிறைவான மகிழ்வாகும் (எண் 222).

■ சுற்றுச்சூழல் பாதுகாப்பு, காலநிலை மாற்றம் போன்றவை திருஅவையின் இன்றைய சமூகப் போதனையின் முக்கிய விடயங்களாகும் (எண் 15). திருத்தந்தையவர்கள் குறிப்பிடுகையில் சுற்றுச்சூழல் பிரச்சினையானது இன்றைய சமூகம் எதிர்கொள்கின்ற மிக முக்கியமான பிரச்சினையாகும். இதற்கு தீர்வு காண்பதில் உலக மாந்தர் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்கிறார் (எண் 5).

இன்றைய சுற்றுச்சூழல் சீர்கேட்டினாலும், காலநிலை மாற்றத்தாலும் உலகம் நீர்ப் பற்றாக்குறை, உயிரினங்களின் அழிவு, கடல் மட்ட உயர்வினையும் அதனால் ஏற்படும் ஆபத்துக் களையும் சந்திக்கின்றது. சூழல் மாசுறுவதால் ஏற்படும் சிக்கல்களுக்குத் தீர்வு காண மனித அனுபவ அறிவு உதவி செய்ய வேண்டும். மறுபக்கத்தில் திருவிவிலியமும், திருஅவையின் படிப்பினையும் பல அரிய கருத்துக்களை முன் மொழிகின்றன. மனிதர்கள் மண்ணுலகை பண் படுத்தி பாதுகாப்பதற்குப் (தொநூ. 2:15) பதிலாக அதனைக் கொள்ளையடிக்கத் தொடங்கிவிட்டனர் (எண்கள் 66, 67). ஆனால், இறைவன் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பி உலகோடுகூடிய தமது ஒன்றிப்பினை எண்பித்துள்ளார். அவ்வாறே இந்த உலகினை நாமும் அன்புசெய்து வாழ்ந்திட அசிசி நகர் தூய பிரான்சிஸ் போன்றோர் நமக்கு வழிகாட்டியுள்ளனர்.

■ மனிதர்கள் யாருமே இவ்வுலகத்திற்கு அப்பாற் பட்டவர்கள் அல்ல மாறாக அதனோடு ஒன்றாக ஒட்டி உறவாடப் பிறந்தவர்கள் (எண் 139) என்கின்ற வகையில் சுற்றுச்சூழல் பிரச்சினையானது அனைவ ரையுமே பாதிக்கின்றது. மனிதர்கள் வாழும் உலகம் சீரழியும்போது அதில் வாழும் மக்கள் குறிப்பாக ஏழைகள் பாதிக்கப்படுகின்றார்கள். உலக அமைதி பாதிப்புக்குள்ளாகின்றது. மனிதர்களின் உள்ளத்திலும் அமைதியின்மை ஏற்படுகின்றது (எண் 10). இலாபத்தை மட்டும் நோக்கமாகக்கொண்டு பொருள் பரிமாற்றம் நிகழுமாயின் நமது பொதுவீடாகிய இவ்வுலகம் அழிவினை நோக்கித்தான் விரையும் (எண் 187).

■ சுற்றுச்சூழலானது எவ்வாறு மாசுபடுகிறது என்றோ, காலநிலை மாற்றத்தால் பூமி எவ் வாறு பாதிக்கப்படுகிறது என்றோ, அதற்கு எவ்வகையான தீர்வுகளை வழங்கலாம் என்றோ அறிவியல் பூர்வமாக எடுத்துரைப்பது திரு அவையின் பணியன்று. அதேவேளையில் அவை வழங்கும் தீர்வுகளைக் கவனமுடன் கருத்தில் கொள்ளல் வேண்டும் (எண் 15).

■ சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் என்பனவற்றால் அதிகம் பாதிக்கப்படுவது ஏழைகளே என்பது கண்கூடு. ஆயினும் வசதி யுடையோர் கண்டும் செயல்படாமல் இருப் பது வேதனையைத் தருகிறது (எண் 26). ஏழை மக்களின் வாழ்க்கை அனுபவத்தை உணரா தவர்கள் அரசியலிலும், அதிகாரத்திலும் இருப் பதால் அவர்கள் சுயநலத்திற்கு இடம் அளித்து பொதுநலனை மறந்து விடுகின்ற ஆபத்து நிலவுகிறது (எண்கள் 90, 91).

■ நமது பொது இல்லமாகிய பூமியினைப் பாது காப்பதற்கான இச்சுற்றுமடலின் சிறப்பம்சம், உலக மக்கள் அனைவரோடும் உரையாடலில் ஈடுபட்டு அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண விடுக்கப்படும் அழைப்பாகும். இது விடயமாக பலநாடுகளின் ஆயர் பேரவை களின் அறிக்கைகளைத் தமது சுற்றுமடலில் திருத்தந்தையவர்கள் பயன்படுத்தியுள்ளார். அது

தொடர் 20ம் பக். ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இரத்த விருத்தி தரும் வாழைக்காய்


வாழைக்காயில் பல வகைகள் இருந்தாலும் மொந்தன் இரகத்தைத்தான் சமைப்பது வழக்கம். அதற்காக மற்ற வகை வாழைக் காய்களைச் சாப்பிடக் கூடாது என்பது கிடையாது. அவைகள் பரவலாகக் கிடைப்பதில்லை. மொந்தன் வாழைக்காயில் இரும்புச்சத்துடன் நிறைய மாவுச்சத்து இருக்கிறது. இதனால் உடல் பருக்கும். உடலுக்கு நல்ல வளர்ச்சி கிடைக்கும். பசியை அடக்கும். இதனுடன் மிளகு சீரகம் சேர்த்து சமைப்பது மிகவும் நல்லது. வாயால் இரத்தம் வடிபவர்களுக்கும், நீரழிவு உள்ளவர்களுக்கும் பத்திய உணவாக வாழைக் கச்சல் பயன்படும்.

வாழைக்காயைச் சமைக்கும்போது மேல் தோலை மெல்லியதாகச் சீவியெடுத்தால் போதும். உள்தோலுடன் சமைப்பதே சிறந்தது. சிலர் இதுபோன்று சீவியெடுத்த தோலை நறுக்கி வதக்கி, புளி, மிளகாய் சேர்த்துத் துவையலாகச் செய்து உண்பார்கள்.

இப்படி துவையலாகச் செய்து சாப்பிடுவதால் இரத்த விருத்தியும், பலமும் உண்டாகும். வாழைக்காய் சாப்பிடுவதால் வயிறு இரைச்சல், கழிச்சல், வாயில் நீர் ஊறுதல், இருமல் ஆகியவையும் நீங்கும். ஆனால், வாய்வு மிகும். அதுபோல வாழைப்பிஞ்சு சாப்பிடுவது பத்தியத்திற்கு ஏற்றதுதான் என்றாலும் மலத்தை இறுக்கி விடும்.

பச்சை வாழைக்காயைச் சின்னச் சின்ன வில்லைகளாக நறுக்கி வெயிலில் உலர்த்தி மாவாக்கி உப்புடன் சேர்த்து சாப்பிட்டு வந்தால் அஜீரணம், புளிச்ச ஏப்பம் ஆகியவை நீங்கும்.

## எளிமையான வீட்டுக்குறிப்புகள்



வெங்காயத்தையும், உருளைக் கிழங்கையும் காற்றுப் போகக்கூடிய கூடைகளில் தனித்தனியே போட்டு வைக்க வேண்டும். ஒன்றாக வைத்தால் உருளைக்கிழங்கு விரைவில் அழுகிவிடும்.

* * * * * * * *



வெள்ளைத் துணிகளைத் துவைக்கும்போது தண்ணீரில் சிறிதளவு உப்புச் சேர்த்து ஊறவைத்தால் துணிகள் பளிச்சிடும்.

* * * * * * * * * * * * * * * * *



வெண்டைக்காய் முற்றிவிடாமல் இருக்க காயின் மேல்பகுதி, அடிப்பகுதிகளை சிறிதளவு நறுக்கி வைத்துக்கொள்ளலாம்.

* * * * * * * *



பூண்டு அதிகமாக உரிக்கவேண்டிய சமயத்தில், பூண்டில் சிறிதளவு எண்ணெய் தடவி 3 மணி நேரம் வெயிலில் வைத்து எடுத்துத் தோல் உரித்தால், இலகுவாக உரிக்க முடியும்.



இட்லி ஊற்றும்போது கரண்டியை மாவில் விட்டு அடிவரை கலக்காமல் மேலாக லேசாகக் கலக்கி ஊற்ற இட்லி மிருதுவாக வரும். அதேபோல் இட்லிக்கு அரிசி 5 பங்கு உளுந்து ஒரு பங்கு மட்டும் சேர்த்து அரைத்தால், பஞ்சு போன்ற மென்மையான இட்லி கிடைக்கும். தோசைக்குத் தனியாக வெந்தயம் கலந்து மாவை அரைத்து வைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கலைஞரே கவிவாணரே!



கலைக்கோட்டன் அ. இருதயநாதன்

கலைஞரே கவிவாணரே
கனல் கக்கும் வசன கர்த்தாவே - நாம்
அனலிடை மெழுகானோமே!
அலை தழுவும் மெரினாவில்
அசையாத உறக்கமேனோ!
நிலாவுலகு வலம் வரும் வரையும்
நின் நினைவை மறந்திடோம் நாம்!

வைகறையிலே உதயசூரியன்
பின்னரவன் ஆதவனாகிறான்
நடுப்பகல் நாழிகையிலோ கதிரவன்
மாலையில் அஸ்தமன சூரியன்
இது இருளைப் பகலாக்கிய
இந்திரஜாலம்
இதுபோன்றே
தமிழினத்தின் இருள் துலக்க
சினிமா என்னும் அம்புதனை
சீராக ஏவிய
அர்ச்சுனன் நீரல்லோ!
இன்று
கலைஞர் கருணாநிதியே - உமது
அம்பறாத் தூணி வெறுமையாச்சுதையா!

ஒரு பானைக்கு ஒரு சோறு பதம்
இதுபோன்று
நீர் கதை - வசனமெழுதிய
நாற்பதுக்கு மேற்பட்ட படங்களில்
பராசக்தியை
என் பேனா தொடுகின்றது...!
ஆம்

பராசக்தியிலே தங்களது வசனத்திற்கு
உயிர் கொடுத்த நடிப்பின் இமயம்
செவாலியர் சிவாஜிகணேசனின்
குரல் ஒலிக்கிறது..!
கோவிலிலே குழப்பம் விளைவித்தேன்
பூசாரியைத் தாக்கினேன்
குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறேன்
இப்படியெல்லாம்!
கோவிலிலே குழப்பம் விழைவித்தேன்
கோவில் கூடாதென்பதற்காகவல்ல!

கோவில் கொடியவரின் கூடாரமாய்
இருக்கக் கூடாதென்பதற்காகத்தான்

ஆம்! கலைஞரே! இந்த வசனம்!
இதை கேட்டதும் எமது இதயங்களில்
திருவிவிலியத்தில்
இயேசுவின் கோயில் தூய்மையாக்கல்
மறையுரை மனதில் எழுகின்றதே!
கோவிலிலே ஆடு, மாடு, புறா விற்போர்
நாணயம் மாற்றுவோர் அனைவரையும்
இயேசு சாட்டை பின்னி கலைத்தாரே

பராசக்தியில் பரமன் மகன் இயேசுவின்
மறைவார்த்தைகள்
செல்வாக்குச் செலுத்துகின்றனவே
எமது அன்புக் கலைஞரே
உமது எண்ணத்திலும்
உமது வசனத்திலும்
இயேசுவைக் காண வைத்துவிட்டீரே
கோயில் கொடியவரின் கூடாரமென்ற
உமது வசனங்களை
அன்று இயேசு வேறு வடிவில் கூறினார்.

நீர் வாழ்ந்த காலத்தில்
சமுதாய விழிப்புணர்சுக்கு என்ன தேவையோ
திரைக் கதை - வசனங்களில் சொன்னீர்
அவை
எதிர்காலத்திற்கும் ஏற்புடையதானதே

செம்மொழிச் சிங்கமே
தேன் தூங்கி கயல் மீன்கள் துள்ளும்
தேமதுர தமிழ் நாடாம்
மட்டுமா நகரிலிருந்து
உம்மை அஞ்சலிக்கின்றோம்
உமது ஆத்மா சாந்தியடையட்டும்
தொண்டன் மூலமாக
இறைவனிடம்
தெண்டனிட்டு தோத்தரிக்கின்றோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இந்த மடலை 26/8/2018 ஞாயிற்றுக்கிழமை திருப்பலியில் வாசிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.
இப்படிக்கு, திருகுமுதல்வர்

**CATHOLIC BISHOPS' CONFERENCE IN SRI LANKA**
Lankarama, 19, Balcombe Place, Colombo - 08, Sri Lanka.
Tel. No : 0094-11-2697062 / 2697110
Fax No : 0094-11-2699619
E-mail : EpiscopalSL@gmail.com

Rev.Fr.A.Thevathasan
Vicar General
Of Batticaloa Diocese

# மரண தண்டனை நிறைவேற்றும் சட்டத்தை அனுமதிக்க மறுக்கும் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை.

கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூல் எண் 2267 – "அனைவரது பொது நன்மையை குறித்து சில பாரதூரமான குற்றங்களுக்காக மரண தண்டனை அளிப்பது நாட்டின் சட்டத்துறையை சார்ந்து எடுக்கும் முடிவுகள் சாதாரணமாகும்."

இதை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எந்த நிலையிலும் மரண தண்டனை நிறைவேற்றுவது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதென மாற்றியமைத்துள்ளார். இதை இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையான நாம் ஆதரிக்கின்றோம்.

"தனி மனித மாண்பானது, அவன் எவ்வளவு பெரிய குற்றம் புரிந்திருப்பினும் தொலைந்துவிடுவதில்லை, இந்த புரிந்துணர்வானது நாட்டின் சட்டங்களாலும் புரிந்துகொள்ளப்படுகின்றது. இறுதியாக குடி மக்களின் உரிமைகள் பாதுகாக்கவேண்டியது மிக முக்கியமானதென்றாலும் குற்றவாளி மனமாற்றம் அடைவாரென்ற நம்பிக்கையை இல்லாதொழிக்க முடியாது. இதனாலேயே திருச்சபையானது நற்செய்தியின் ஒளியில் மரண தண்டனை நிறைவேற்றுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாதென கற்பிக்கின்றது. ஏனெனில் இது தனிமனித உரிமையையும் மாண்பையும் சேதப்படுத்துவதால் மரண தண்டனை நிறைவேற்றும் சட்டத்தை ஒழிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன."

"போதைபொருள் இன்றைய உலகின் புதிய காயமும், அடிமைத்தனமும் ஆகும். இந்த விஷம் சமுதாயத்தை அழிப்பதால் இதை வேரறுக்க நாங்கள் போராட வேண்டும். குடும்பங்கள், கல்வி நிறுவனங்கள், சமுதாய அமைப்புக்கள் மற்றும் தனியார், அரசாங்க நிறுவனங்கள் ஒன்றிணைந்து போதைபொருட்களைத் தடுக்க, அதற்கு அடிமைப்பட்டவர்களை குணமாக்க, அவர்களுக்கு புனர்வாழ்வளிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" எனவும் திருத்தந்தை வலியுறுத்தியுள்ளார்.

தற்போது சிறைச்சாலைகளில் போதைப்பொருள் சம்பந்தமான குற்றச்சாட்டுக்கள் அதிகரிப்பதாக அறியப்பட்டுள்ளது. இதை தடுக்க கடுமையான சட்டங்கள் அமுல்படுத்தவேண்டும்.

✠ மேதகு. ஜேவின்ஸ்டன் எஸ்.பர்னாந்து, ச.ச.ச
தலைவர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை.
பதுளை மறைமாவட்ட ஆயர்.

✠ மேதகு. ஜோசப் பொன்னையா
உப தலைவர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை.
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்.

✠ மேதகு தோமஸ் எம். அன்றாடி அ.ம.தி.
அநுராதபுரம் மறைமாவட்ட ஆயர்.

✠ மேதகு கிளீட்டஸ் சி. பெரேரா ப.பெ.ச
இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர்.

✠ மேதகு ரேமன் கே. விக்கிரமசிங்க
காலி மறைமாவட்ட ஆயர்.

✠ மேதகு நோயல் சி. இமானுவேல்
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்.

✠ மேதகு D. வலன்ஸ் மெண்டிஸ்,
பொதுச்செயலாளர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை.
சிலாபம் மறைமாவட்ட ஆயர்.

✠ அதிமேதகு கர்தினால் மல்கம் ரஞ்சித்.
கொழும்பு மறைமாவட்ட பேராயர்.

✠ மேதகு ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம்
யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர்.

✠ மேதகு லை. ஈ. இமானுவேல்
மன்னார் மறைமாவட்ட ஆயர்.

✠ மேதகு மக்ஸ்வல் ஜி. சில்வா
கொழும்பு மறைமாவட்ட உதவி ஆயர்.

✠ மேதகு ஜே. டி. அந்தோனி
கொழும்பு மறைமாவட்ட உதவி ஆயர்.

✠ மேதகு ஜே. வியனி பிரனாந்து
கண்டி மறைமாவட்ட ஆயர்.

✠ மேதகு ஹரல்ட் ஏ. பெரேரா
குருநாகலை மறைமாவட்ட ஆயர்.

09 ஆம் திகதி ஆவணி மாதம் 2018.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# புலமைப்பரிசில்

- ஆழியோன் -

ஓகஸ்ட் மாதம் விலகிவிட்டது. 5ம் வகுப்பு மாணவர்களும், உயர்தர வகுப்புப் பிள்ளைகளும் பொதுப்பரீட்சைகள் முடிவடைந்துவிட்டன என்பதனால் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கின்றார்கள். உண்மையில் 5ம் வகுப்பைப் பொறுத்தவரை அம்மாமாருக்கு பெரும் ஆறுதல்.

வழமையாக ஓகஸ்ட் மாத இறுதிப்பகுதியில்தான் 5ம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சைகள் நடைபெறுவது வழக்கம்; இம்முறை பரீட்சைத் திணைக்களம் அதிரடி நடவடிக்கையொன்றையெடுத்து ஓகஸ்ட் 1ம் வாரம், 5ம் திகதி ஞாயிறன்று பரீட்சையை நடாத்திமுடித்துவிட்டது; இதனை நீங்கள் வாசிக்கும்போது பரீட்சை முடிவுகள் வெளிவந்துவிட்டிருக்கலாம்.

5ம் வகுப்புப் பிள்ளைகள் இப்பரீட்சை தொடர்பாக படும்பாடுகள் அதீதம். சிலர் நகைச்சுவையாகச் சொன்னாலும் உண்மையும் அதுதான். அதாவது, 'இது அம்மாமாருக்கான பரீட்சை...' உலகத்திலேயே நடக்கின்ற பரீட்சைகளில் மிகவும் அதிகமானோர் தோற்றுவதும், சிக்கலானதும், சிறப்பாகவும், திறமையாகவும் நடத்தப் படுவதுமான பரீட்சைகள் 5ம் வகுப்புப் பரீட்சை, க.பொ.த (சா.த), க.பொ.த (உ.த) என்பனவாகும். ஆனால், 5ம் புலமைப்பரிசில் பரீட்சையை அறிமுகம் செய்த இலவசக் கல்வியின் தந்தை C.W.W. கன்னங்கரா அவர்களின் நோக்கம் இப்போது தலைகீழாக மாறிவிட்டது என்றே எண்ணத் தோன்றுகின்றது. படிக்கக்கூடிய, வசதி குறைந்த மாணவர்களைத் தெரிந்தெடுத்து, அவர்கட்கு உதவித் தொகையையும் பெற்றுக்கொடுப்பதுடன், பிரபல பாடசாலைகளில் அனுமதியையும் பெற்றுக்கொடுப்பதுமே இப்பரீட்சையின் நோக்கமாகும். ஆனால், தற்போது பரீட்சையில் தோற்றும் மாணவர்களில் கணிசமானோர் வசதி படைத்தவர்களாகவும், பிரபல பாடசாலைகளில் கற்பவர்களாகவும் காணப்படுகின்றனர். அவ்வாறானவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றி வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெறுவதனால், வசதி குறைந்த மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

ஒரு மாவட்டத்தில் 5ம் வகுப்புப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் பத்து சதவீதத்தினர் உள்ளடங்குமாறுதான் மாவட்ட ரீதியில் வெட்டுப் புள்ளிகள் தீர்மானிக்கப்படுகின்றன. பத்தாயிரம் பேர் தோற்றினால் ஆயிரம் பேர் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெறுவர். இதில் இன்னுமொரு விடயம் கவனிக்கப்படல் வேண்டும்; இரண்டு பாடங்களிலும் தலா 35 புள்ளிகளுக்குக் குறையாமல் மொத்தமாக 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் அனைவரும் இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகக் கருதப்படுவர்; ஆனால் வெட்டுப்புள்ளிகட்கு மேல் பெறும் வருமானம் குறைந்த பிள்ளைகளே உதவித்தொகை பெற உரித்துடையவர்.

இப்பரீட்சைக்குத் தோற்றும் பிள்ளைகள் பத்து வயதுடையவர்கள்; பிஞ்சுகள். 3ம் வகுப்பு தொடக்கம் 5ம் வகுப்பு வரையுள்ள ஆசிரியர்கள் அறிவுரை வழிகாட்டிகள் மற்றும் பாடப்புத்தகங்கள் என்பனவற்றில் உள்ள விடயங்கள் மட்டுமே பிள்ளைகட்குத் தேவை; அத்துடன் வினாத்தாளைச் செய்வதற்குரிய நேரக் கட்டுப்பாட்டுப் பயிற்சிகள் மட்டுமே மேலதிகமாக தேவை.

இப்பிள்ளைகளைப் போட்டு அனைவரும் என்னபாடுதான் படுத்துகின்றோம். ஓட, ஓட விரட்டுகின்றோம். அவர்களை இயந்திரமாக மாற்றுகின்றோம். அவர்களின் உள்ளத்தை உடைத்துவிடுகின்றோம்.

பெற்றோர்களும், 'கல்விக்கடைகளும்', பாடசாலைகளும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும். பெரியவர்களின் கௌரவப் பிரச்சினை பிள்ளைகளை சீரழிக்கின்றது. 5ம் வகுப்பு பரீட்சையில் உயர்சித்தி பெற்றவர்களில், உயர்தரப் பரீட்சையில் வெற்றி பெறுபவர்களின் எண்ணிக்கையை அறிந்தால் வெதும்பிப் போவோம்.

தொடர் 22ம் பக்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இதுதான்டா அரசியல்

## ஓ! ஜெருசலேமே!

கடந்த இதழ் தொடர்ச்சி ....

மேற்குலகினின்றும் மீள் குடியேறிய கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட முக்கிய புனித ஸ்தலங்களைக் கட்டியெழுப்பவதற்கு முனைந்தார்கள்.

கிறிஸ்துவின் கல்லறையை அவர்கள் மிகுந்த முனைப்போடு ஆதி ஐரோப்பிய கட்டிடக்கலையினைப் பிரதிபலிக்கும் வகையில் பிரமாண்டமாக அமைத்தார்கள். அல் - அக்ஸா பள்ளிவாயில் மற்றும் மலைக்கோயில், பாறை மீது அமைக்கப்பட்ட வளைவு அமைப்பு என்பனவெல்லாம் கிறிஸ்தவர்கள் பயன்பாட்டிற்கேற்ப புதுப்பிக்கப்பட்டன. இந்தக் காலகட்டத்தில் (வழக்கொழிந்த பிராங்கிஷ் மொழி பேசுகின்றவர்கள்) ஜெருசலேமை ஆண்டு கொண்டிருந்தார்கள். மக்கள் சேவைக்கென ஐரோப்பாவில் அரசனால் நியமிக்கப்படும் பிரபுக்கள் அணி மற்றும் 1096 இல் நடைபெற்ற சிலுவை யுத்தத்தின் பின்னர் ஜெருசலேமை நோக்கி வந்த புனித யாத்திரிகர்களைப் பாதுகாக்கும் முகமாக 1119 அளவில் மன்னனால் ஜெருசலேமில் அமைக்கப்பட்ட பாதுகாவல் அணியினர் இந்தப் பாதுகாப்புப் பணியிலும் யாத்திரிகர்கள் நலன்பேணும் பணியிலும் ஈடுபடுத்தப்பட்டனர். பிற்காலத்தில் இந்தப் பாதுகாப்பு அணியினர் வர்த்தகத்தில் ஈடுபட்டுப் பெரும் செல்வந்தர்கள் ஆனதைக் கண்டு கொண்ட பாப்பரசர் 1312 இல் இவர்களை ஒடுக்கிப் போட்டார்.

ஆய்யுபிட்க்கள், பாஹ்ரி மம்முலுக்கள் மற்றும் புரிஜி மம்லுக்கள் காலம் ஜெருசலேமின் சொந்த இராச்சியத்தின் காலம் 1291 வரையிலும்தான் நீடித்தது. இருந்தும் சலடீன் என்பவனால் அது 1187 இலே மீளக் கைப்பற்றப்பட்டிருந்தது. ஜெர்மனிய யூத ராபியான ஷெல்ம் நகர எலிஜா என்பவர் கூற்றுப்படி சலடீன் அனைத்து மதத்து மக்களும் தம் மத அனுஷ்டானங்களை மேற்கொள்ள அனுமதி வழங்கியிருந்தான். 11 ஆம் நூற்றாண்டு காலகட்டத்தில் ஜேர்மன் நாட்டினின்றும் வந்த, ஜேர்மன் மொழி பேசும் யூதர்கள் ஜெருசலேமில் வாழ்ந்து வந்தனர் என்பதை இந்த ராபி ஊர்ஜிதம் செய்திருக்கிறார். இப்படியும் ஒரு வரலாறு சொல்லப்பட்டுள்ளது. ஜெருசலேமில் வாழ்ந்த யூதர்கள் டொல்பேர்ஜர் என்ற குடும்பப் பெயர் கொண்ட இளவயது ஜேர்மனி நாட்டவனைக் காப்பாற்றியிருக்கிறார்கள். முதலாவது சிலுவை யுத்த பிரபுக்கள் ஜெருசலேமைச் சுற்றி வளைத்தபோது இந்த நன்மைக்குப் பிரதியுபகாரமாக ஜேர்மனிய நாட்டவர்கள் ஜேர்மனிய மொழிபேசிய யூதர்களைக் காப்பாற்றி அவர்களை ஜேர்மனியின் வேர்ம் நகரத்திற்குக் கொண்டு சென்று தம் நன்றிக் கடனைச் செலுத்தினார்களாம். அது மட்டுமல்ல. ஜேர்மன் நாட்டிலிருந்து ஜெருசலேமுக்கு அனுப்பப் பட்டிருந்த கேள்விக் கொத்தொன்றின் மூலம் 11 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஜெருசலேமில் ஜேர்மானியர்கள் வாழ்ந்த வரலாறு உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

1173 இல் பெஞ்சமின் துடல்ல என்றொரு ஆய்வாளர் ஜெருசலேமுக்கு விஜயம் செய்தார். அவர் ஜெருசலேம் பற்றி விவரிக்கின்றபோது. அது ஜெக்கோபைற்றுக்கள், ஆர்மேனியர்கள், கிரேக்கர்கள், ஜோர்ஜியன்களால் நிறைந்திருக்கும் ஒரு சிறிய நகரம் என்று குறிப்பிட்டி ருக்கின்றார். ஊரின் ஒரு மூலையில் தாவீதின் கோபுரம் அமைந்துள்ள இடத்தில் 200 யூத இல்லிடங்கள் அமைந்திருந்தன என்கிறார் அவர். 2019 ஆம் ஆண் டில் டமாஸ்கஸின் ஆயுபிட் சுல்தானாகிய அல் - முவாஸ்ஸம் என்பவனுடைய உத்தரவின் பேரில் ஜெருசலேமின் மதிற் சுவர்கள் தரைமட்டமாக்கப்பட்ட பிறகு அது பாதுகாப்பற்ற பூமியாக மாறியது. அதன் தகமைக்கும் பாரிய பின்னடைவு ஏற்பட்டது. சிலுவை யுத்தக்காரர்களுடன் சமாதான ஏற்பாட்டைப் பேரம் பேசி ஜெருசலேமை கை மாறிக்கொள்ள வசதியாக அமையு மென்ற எதிர்பார்ப்புடன்தான் ஆயுபிட் அத்தகைய உத்தரவை வழங்கியிருந்தான். ஆனாலும் 1229 இல் எகிப்திய ஆட்சியாளன் அல் - காமில் உடன் செய்து கொள்ளப்பட்ட சமாதான உடன்படிக்கையின்படிதான் ஜெருசலேம் ஜெர்மானிய இரண்டாம் பிரெட்ரிக் வசம் ஒப்படைக்கப்பட்டது. 1239 ஆம் ஆண்டு சமாதான உடன்படிக்கையின் காலம் முடிந்ததும் இரண்டாம் பிரெட்ரிக் ஜெருசலேம் நகர மதிற் சுவரை மீள கட்ட முனைந்தான். இருப்பினும் அதே வருடத்தில் கொரக்கின் அரசன் அன் - நசீர் தாவுத்தினால் அது இடிக்கப்பட்டது.

1243 இல் மீண்டும் ஜெருசலேம் கிறிஸ்தவர்கள் வசமாயிற்று. இடிக்கப்பட்ட மதிற்சுவர் பழுது பார்க் கப்பட்டது. 1244 இலே கவெரிஸ்மியன் இராச் சியம் ஜெருசலேமை கையகப்படுத்திக் கொண்டாலும், 1247 இல் ஆக்கிரமிப்பாளர்கள் ஆயுபிட்டுக்களால் விரட்டி யடிக்கப்பட்டார்கள். அதன் பிறகு 1260 இல் ஹூலாகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இரண்டாம் தவணை எதிர்நோக்கு முன்னோடிப் பரீட்சை

தரம் : 11 பகுதி - II கத்தோலிக்கத் திருமறை நேரம்: 3 மணித்தியாலங்கள்

போதகர் S. அருமைராஜா (Dip.in.Chr (India)

08. இ) உறுதிப்பூசுதலூடாக எமக்குக் கிடைக்கும் கொடைகள் எவை?

09. அ) உள்ளார்ந்த மனவருந்துதலுக்கு ஒருவர் செய்ய வேண்டியது யாது?
ஆ) ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறுவதற்கான படிமுறைகள்:
இ) உண்மையாகவே மனம் வருந்தி மனம் மாறியவராக ஒப்புரவு அருளடையாளத்தை பெறுபவர் செய்யவேண்டிய தவச்செயல்கள் எவை?

10. அ) ஒப்புரவு அருளடையாளத்தின் மூலம் எமக்குள் ஏற்படும் விளைவுகள் யாவை?
ஆ) "குணம் பெறுவதற்கு நம்பிக்கை முக்கியமானது" இயேசுவின் மேலுடையைத் தொட்ட பெண்ணுக்கு இயேசு கூறிய வார்த்தை என்ன?
இ) நோயில் பூசுதல் சடங்கு முறையைத் தருக?

11. அ) உண்மையான மனம் வருந்துதலுக்கும், பயத்தினால் ஏற்படும் மனம் வருந்துதலுக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை விளக்குக:
ஆ) நோயில் பூசுதல் வழியாகக் கிடைக்கும் இறையருள் மூன்று தருக:

விடைகள் 26ம் பக்கத்தில் ....




### எருமை

எங்களுந் தாய்த் தமிழோ அருமை
இனிமை மிகுஞ் செம்மொழியாம் பெருமை
சங்கம் வைத் தாண்டதுவும்
சரித்திரங்கள் போற்றியதும்
பங்கமுறப் பார்த்திருப்போர் எருமை!

கான் தலைமையில் மொங்கோலியர்கள் பலஸ்தீனத்துக்குள் நுழைந்தார்கள். அவர்கள் ஜெருசலேமுக்குள் உட்புகுந்தார்களா என்பது குறித்துத் தெளிவான தகவல்கள் இல்லை. ஆயினும், ஜெருசலேமைக் கைக்குள் வைத்திருப்பதென்பதோ, குடியேற்றத்தை மேற்கொள்வதென்பதோ தந்திரோபாய ரீதியில் பலனுள்ளதாக அந்நாட்களில் கருதப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், ஜெருசலேமிலிருந்த யூதர்கள் அயலில் இருந்த நகர்களுக்குத் தற்காலிகமாகத் தப்பியோடிருந்தார்கள் என்று மட்டும் அறியக்கிடக்கின்றது.

1267 ஆம் ஆண்டு வாக்கில் கத்தலோனியாவிலிருந்து ஜெருசலேமுக்குப் பயணித்த யூத அறிஞர் ஒருவர், ஜெருசலேமில் தற்போதும் செயற்படும் மிகப் பழமையான, இரண்டாவதாக உருவாக்கப்பட்டது என்கின்ற சிறப்பைக் கொண்ட யூத வழிபாட்டுத்தலமாகிய சினகொக்கொன்றை அமைத்தார். முதலாவது வழிபாட்டுத் தலம் (சினகொக்) 300 ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்டிருந்தது. 13 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஜெருசலேம் மீண்டும் மாற்றான் வசம் வீழ்ந்தது. எகிப்திய மம்லுக் சுல்தானிடம் அது சென்று விட்டது.

### ஆரம்ப நவயுக காலகட்டம் :

தூய பிரான்சிஸ் அசிசியாரால் உருவாக்கப்பட்ட பிரான்சிஸ்கன் மறைபரப்புப் பணியாளர்களின் முதலாவது மேலாளர் அல்லது மாகாணத் தலைவர் அசிசி நகர் சகோதரர் எலியாவாகும். 1219 இல் தூய பிரான்சிஸ்கு அசிசியாரே, 'எதிரிகளாகவல்ல மாறாக சகோதரர்களாக' அவர் கருதிய முஸ்லிம்களுக்கு நற்செய்தி போதிக்க அப்பிராந்தியத்திற்கு வருகை தந்திருந்தார். அந்த மறைபரப்புப் பணி அவருக்கு எகிப்திய சுல்தான் மாலிக் அல்-கமீலுடன் சந்தித்துப் பேச வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. அவருடைய எளிமையான நடத்தையைக் கண்டு சுல்தான் மலைத்துப் போனான்.

இதன் பிரதிபலனாக பிரான்சிஸ்கன் மிஷனரிகளின் மாகாண எல்லை சைப்பிரஸ், சிரியா, லெபனான், மற்றும் புனித பூமி வரை வியாபித்தது. 1291 மே மாதம் 18 ந் திகதி ஆக்ரே பொறுப்பேற்கப்பட்டதுடன் பிரான்சிஸ்கன் குருக்கள் ஆக்ரே, சீதோன், அந்தியோக்கியா, திரிப்போலி, ஜாவ்பா மற்றும் ஜெருசலேம் எங்கும் காணப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இதயத்துக்கு இதமான வார்த்தைகள்

- அருட்சகோதரி லூட்ஸ் F.M.M -

- கவலைப்பட வேண்டாம். நான் பார்த்துக்கொள்கிறேன்.
- இதோ நான் வந்துகொண்டிருக்கிறேன்.
- கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். ஒரு நிமிடத்தில் ஆயத்தமாகி விடுவேன்.
- நம்பிக்கை வேணுமய்யா.
- ஒரு வார்த்தை சொல்லி ஆளை அனுப்பியிருந்தால் நானே வந்திருப்பேன்.
- இப்படி ஆகும் என்று எதிர்பார்க்கவில்லை.
- இதைச் செய்வதற்கு நீதான் சரியான ஆள்.
- மனித உறவுக்குப் பாசம்தான் பெரிது.
- பேசுவதற்கு என்று ஒரு நேரமிருக்கிறது. பேசாமல் இருக்கவேண்டிய நேரமும் இருக்கிறது.
- மறப்பது மனிதத் தன்மை. மன்னிப்பது தெய்வீகத் தன்மை.



13ம் பக். தொடர்ச்சி....

மட்டுமல்லாது சுற்றுச்சூழல் குறித்த உலகளாவிய உரையாடல் நிகழ்த்த வேண்டியதன் அவசியத்தை ஆர்த்தடாக்சு (Orthodox) மறைமுதுவர் பர்த்தல மேயுவையும், ஓர் இஸ்லாமிய புனிதரையும் மேற்கோள் காட்டுவதன் வாயிலாக எண்பிக்கின்றார்.

இச்சுற்றுமடலின் மற்றுமொரு சிறப்பு திருத்தந்தை பிரான்சிஸ் உலக மாந்தர் அனைவரையும் அழைத்துப் பேசுகிறார். உலகில் மிகப்பெரிய பண்பாட்டுப் புரட்சி நிகழ வேண்டும் (எண் 3, 114). மனிதர்கள் இப்பூவுலகம் குறித்து அக்கறையின்றி செயற்படுவதனால் அது "மாபெரும் குப்பைக் குவியலாக" மாறியுள்ளது (எண் 21). ஆயினும் இச்சுற்றுமடல் ஒளிமயமான எதிர்காலம் உலக மாந்தருக்கு உண்டு என்கின்ற நம்பிக்கையையும் விதைக்கின்றது. இறைவன் இன்னும் மாந்தரோடு இருப்பதால் அனைவரும் ஒன்றாகச் செயற்பட்டு, இப்புவியினை நன்றாகப்பேணி பாதுகாத்திட முடியும் எனும் நம்பிக்கை மறைந்து விடவில்லை. எனவே புவிமாந்தர் அனைவரும் "இப்புவியின் அபயக் குரலுக்கு, ஏழை மக்களின் கூக்குரலுக்கு செவிமடுத்து" (எண் 49), "சுற்றுச்சூழல் நலன் பேணும் மனமாற்றம்" (ecological conversion) பெற்றிட வேண்டும் (காண்க: எண்கள் 5, 216-220).

சமூக அக்கறை தொடரும்....




**மனைவி :** என்னங்க.. அதோ அங்க உக்காந்து தண்ணியடிக்கிறாரே.. அவரு ஒரு தடவை என்னை பொண்ணு பார்க்க வந்திருந்தாரு.

**கணவன்:** சரி அதுக்கு என்ன இப்போ?

**மனைவி:** நான் அவரை கல்யாணம் பண்ணமாட்டேன்னு சொன்னதினால அதை நினைச்சே இத்தனை வருஷமா தண்ணியடிக்கிறாராம்.

**கணவன் :** அடப்பாவி...! அந்த சந்தோஷத்தை இத்தனை வருஷமாவா கொண்டாடிட்டிருக்கான்..?



* * * *



**மனைவி :** என்னங்க பக்கத்து வீட்டில பெரிய சண்டை நடக்குது. போய் ஒரு தடவை என்னன்னு பார்த்துட்டு வாங்களேன்.

**கணவன் :** ஏற்கனவே ஒரு தடவை போனதுக்குத்தான் சண்டையே நடக்குது......

* * * *



**ஜோதிடர் :** உங்கள் வலது கையில் உள்ள இந்த மச்சத்தால் உங்களுக்கு ஒரு நல்ல மனைவி அமைவாள்.

**கோபு :** யோவ் அது மச்சம் இல்லய்யா சூடுய்யா. அதை வச்சதே என் மனைவிதான்யா ??????





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**நா**ம் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது நம்முடைய ஆன்மாவானது ஊர் சுற்றிப்பார்ப்பதற்காக நம்முடைய உடலைவிட்டு வெளியே புறப்பட்டுச் செல்லுமாம். நாம் இப்போது இருக்கும் இந்த 21 ஆம் நூற்றாண்டு என்பது விஞ்ஞானங்களால் நிறைந்த உலகம். அதனால் அஞ்ஞானம் மறைந்து போயிற்று என்று அர்த்தமில்லை. நீங்கள் இந்த உலகத்தை உற்றுப் பார்த்தால் உங்களுக்கே நன்றாகப் புரியும்.

ஒருகாலத்தில் கடவுள் மறுப்பாளர்கள் ஒரு பக்கம் தங்கள் கருத்துக்களை ஊர்கூட்டி, சொல்லிக் கொண்டிருந்தார்கள். இப்போது எந்த அளவுக்கு விஞ்ஞானம் வளர்ந்து கொண்டிருக்கிறதோ அதே அளவுக்கு கடவுள் நம்பிக்கையும் ஒருபக்கம் பரப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது.

**கனவுகள்**

கடவுள் இருக்கிறாரா இல்லையா என்பதையும் தாண்டி, நம்மைச் சுற்றிலும் நம்மை மீறிய ஏதோ ஒரு சக்தி இருப்பதாக நாம் உணர்கிறோம். அதை எல்லோருமே பாரபட்சமின்றி ஏற்றுக்கொள்கிறோம். அப்படி ஏதோவொரு அதீத திறன்கொண்ட சக்தியாகத் தான் நாம் கனவைப் பார்க்கிறோம். அதனால்தான் நாம் கனவில் நடப்பதைப் பற்றிய யோசனையில் மூழ்குகிறோம்.

**ஆராய்ச்சி**

நாம் ஆழ்மனதில் என்ன நினைக்கிறோமோ அதுவே கனவாக வருகிறது என்று சொல்லப்படுகிறது. அதையே நாமும் நம்பிக் கொண்டிருக்கிறோம். அதுபற்றி சிக்மண்ட் பிராய்டு தொடங்கி, ஏராளமானோர் ஆராய்ச்சியும் மேற்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதைத்தாண்டி இன்னுமொரு விடயமும் அதில் இருக்கிறது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

**ஆன்மா வெளியேற்றம்**

ஆன்மா என்று சொல்லப்படுவதைத் தான் நாம் உயிர், ஆவி என்றெல்லாம் வேறுவேறு பெயர்களில் அழைக்கிறோம். அந்த ஆன்மாவானது நாம் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்பொழுது நம்முடைய உடலைவிட்டு வெளி உலகத்தைச் சுற்றி வருவதாகக் கூறப்படுகிறது.

**இது மாயையா? உண்மையா?**

என்னுடைய இறந்து போன தந்தை என்னுடைய கனவில் வந்தார். என்னிடம் பேசினார். எனக்கு இருக்கும் பிரச்சினைக்கு சில வழிகாட்டுதல்கள் தந்தார். அதன்படி நடந்து கொண்டதால், எனக்கு அந்த பிரச்சினைகளெல்லாம் தீர்ந்தன என்று யாராவது சொல்லக் கேட்டிருப்போம். அதெப்படி இவருடைய தந்தை இவருடைய கனவில் வரமுடியும். இருவரும் கலந்துரையாட முடியும்? ஏனென்றால், இருவருடைய ஆன்மாவும் சந்தித்துக் கொண்டன. ஒன்றின் பிரச்சினைக்கு மற்றொரு ஆன்மா வழிகாட்டியது என்றுதான் அர்த்தம். இப்போது தூங்கும்போது ஆன்மா வெளியே போகும் என்ற நம்பிக்கை கொஞ்சமாவது வந்து விட்டதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உண்மை**

இப்படி நாம் காணும் கனவுகளில் சில அப்படியே நடக்கும். இதற்கு முன்பாக நாம் செல்லாத சில இடங்களுக்குப் புதிதாகப் போகும்போது, நாம் கனவில் பார்த்த அதே இடத்தை அச்சு அசலாக எந்த மாற்றமும் இல்லாமல் பார்க்க நேரிடும். இப்போது நம்புகிறீர்களா நம்முடைய ஆன்மா அந்த இடங்களில் எப்போதோ உலவியிருக்கிறது என்பதை. அது நாம் விழித்திருக்கும்போது சாத்தியமில்லை. அதனால் நிச்சயம் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது தான் அது நடந்திருக்கும்.

**தூங்குபவரை எழுப்பக்கூடாது**

நாம் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது நம்முடைய ஆன்மாவானது நம்முடைய உடலை விட்டு வெளியே புறப்பட்டுச் செல்வதனால்தான் ஒருவர் தூங்கும்போது அவசரமாக அவரை எழுப்பக்கூடாது என்று சொல்கிறார்களாம்.

அப்படி நல்ல ஆழ்ந்த தூக்கத்தில் இருப்பவர்களைத் தட்டி எழுப்பும்போது, உடலைவிட்டு, வெளியுலகத்தில் சுற்றும் ஆன்மாவானது பல இலட்சம் கிலோமீட்டர் வேகத்தில் மீண்டும் உடலுக்குள் புகுந்து கொள்ளும் என்று ஆத்ம சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

**மருத்துவர்கள்**

தூக்கத்தில் இருப்பவர்களைத் தட்டி எழுப்பக் கூடாது என்று மருத்துவர்களும் குறிப்பிடுவார்கள். அவ்வாறு அடிக்கடி தூக்கத்தில் இருப்பவர்களை வேகமாகவோ, திடீரெனவோ தட்டி எழுப்பினால் அவர்களுக்கு மனநிலை பாதிக்கப்படக்கூடும் என்றும் மருத்துவர்கள் குறிப்பிடுகிறார்கள்.




## கண்டங்கள் கண்டு வியப்போம்!

**ஆசியா**

- இது ஏழு கண்டங்களுள் அளவிலும் மக்கள் தொகையிலும் மிகப் பெரியதாகும்.
- யூரால் மலைத் தொடர் இதனை ஐரோப்பாவிலிருந்து பிரிக்கிறது.
- உயரமான சிகரங்கள் : எவரெஸ்ட் (8,852 மீ), கஞ்சன்ஜங்கா (8,598 மீ) போன்றவை.
- பெரிய ஏரிகள் : அரால் கடல், பைக்கால் ஏரி, பால்காஷ் ஏரி, காஸ்பியன் கடல், சாக்கடல் முதலியன.




**எது நடக்கிறதோ...**

கீதையில் பார்த்தன் உபதேசம்
எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடந்து கொண்டிருக்கிறதோ
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ
அது நன்றாகவே நடக்கும் என்கிறான்.
எதுவும் நன்மைக்கே என்னும் முன்னோர்கள்,
முதியோர்கள் கூற்று வெறும்
வார்த்தை ஜாலங்களில்லை
நம் வாழ்வோடு எண்ணிப் பார்க்கையில்....
அவை ஆயிரம் பொருள் கொடுக்கும்!
நமக்கு நடப்பவை பற்றி நாம்
கவலைப்படாது, சிந்தித்து மாளாது
நம் இதயம் கூறுவதற்குக் காது கொடுத்தால்
நடப்பவை யாவும் நலமாகவே அமையும்!
கிடைப்பதை ஏற்றுக் கொண்டு,
நடந்ததை மறந்துவிட்டு, வருவதை
தாராள மனதுடன் ஏற்றுக் கொண்டால்
நாளை நாள் நாம் நம் வாழ்வை
திரும்பிப் பார்க்கின்றபோது
நமக்கு நடந்ததெல்லாம்
நல்லதோ, கெட்டதோ வாழ்வில் நாம்
பெற்ற அனுபவங்கள் ஊடாக நமக்குப்
பலம் கொடுத்து நம்மை உயர(த்தில்)
வைத்துள்ளதை உணர முடியும்

**ஆனந்தா ஏ.ஜீ.இராஜேந்திரம்**

17ம் பக. தொடர் ....

இங்கு கல்வியியலாளர்கள் மாற்று ஏற்பாடுகள் செய்யவேண்டும். இப்பரீட்சையை 8ம் தரத்திற்கு மாற்ற சிபார்சுகள் செய்யப்பட்டபோதும் அரசியல் விடுவதாக இல்லைபோல் தெரிகின்றது.

இம்முறை ஓகஸ்ட் 5ம் திகதி பரீட்சை நடை பெற்றதால் தவணை விடுமுறையை அவர்கள் மகிழ்வாகக் கழித்திருப்பார்கள் என்று நம்புவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வினாவிடைப் போட்டிக்கான அனுசரணை வழங்குபவர் :
திரு. M.M. ஜெஸ்லிராஜ்,
M.J. மெகா எலெக்ரோனிக்ஸ் அண்ட் பேணிச்சர்ஸ்
142 A, விபுலானந்தபுரம், மயிலம்பாவெளி, மட்டக்களப்பு.
தொ.எண்: 0779780151, 0775019977

## வினாவிடைப் போட்டி இல. - 06

1) "ஆண்டவர் தேவையில்லை, நற்கருணை பெறுவதால் எவ்விதப் பயனுமில்லை" எனப் பிரிந்து சென்றவன் யார்?

..........

2) 52வது அகில உலக நற்கருணை மாநாடு எங்கே, எப்போது நடைபெறவிருக்கிறது?

..........

3) திருச்சபையின் முதலாவது சமூகப் போதனையாக வெளியிடப்பட்ட சுற்றுமடல் எது? எப்போது, யாரால் வெளியிடப்பட்டது?

..........

4) "இன்றைய உலகில் நற்செய்தி அறிவிப்பு" என்ற போதனை ஏட்டின் எண் 7ஐத் தருக:

..........

5) "எனது தசையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர்; நானும் அவர்களோடு இணைந்திருப்பேன்" இத்திருவிவிலிய வசனத்தின் இலக்கத்தைத் தருக ?

..........

6) 2ம் வத்திக்கான் பொதுச்சங்கம் எத்தனையாம் பொதுச்சங்கம்? இது நடைபெறும் என யாரால், எப்போது அறிவிக்கப்பட்டது?

..........

7) இளநீரில் உள்ள ஊட்டச்சத்துக்கள் எவை? இவற்றின் பயன்கள் யாவை?

..........

8) எப்போது பாபிலோனியர் ஜெருசலேமைக் கைப்பற்றினர்? அப்போது பாபிலோனியரால் சிறைப்படுத்தப்பட்டவன் யார்?

..........

9) இலங்கைச் சுதந்திர விழாவை முன்னிட்டு நடைபெற்ற "மரதன்" தமிழ்ப் பாடற் போட்டியில் முதற்பரிசு பெற்றவர் யார்? இவர் எங்கு ஆசிரியராக இருந்தார்?

..........

10) ஆண்டவரிடமும், சாமுவேலிடமும் மக்கள் மிகுந்த அச்சங்கொள்ளக் காரணம் யாது?

..........

பெயர் : ..........
முகவரி : ..........
..........

**அனுப்பவேண்டிய முகவரி:**
வினாவிடைப் போட்டி - 06
தொண்டன்
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

முடிவுத்திகதி : 30.09.2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த ஆடித்திங்கள் 21ம் நாள் இவ்வுலகை நீத்து இறையடி சேர்ந்த கவிஞர், எழுத்தாளர், கலைஞர் அமரர் கிறிஸ்டி முருகுப்பிள்ளைக்கு ஓர் அஞ்சலி

# இஸ்தமித்துவிட்ட பிள்ளை




மட்டுமா நகரில் எருவிலெனும் ஊரில்,
பெற்றவர்களின் பேருவகையுடன்,
கொற்றவளின் கருவிலே உருவானவன்
காண்பவரைத்தன் கருவிழியால் துரு, துருவென
கவர்ந்திட்ட காந்தக்கண்ணனவன்
ஒடிசலான தோற்றமும் உரிய பருவத்தில்
புலமைப்பரிசில் சித்தியினால் தொடர்ந்ததுவே
உயர்கல்வி வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயத்தில்
இட்ட பெயரோ முருகுப்பிள்ளையென்றாலும்
இடையில் வந்தபெயர் கிறிஸ்டி முருகுப்பிள்ளை

பல்கலைக்கழகமதில் கற்றபின் கிடைத்ததுவோ ஆசான்,
பெயர்ந்ததுவோ தென்ன மரவாடியெனும் ஊரே - பின்பு
பயத்தினாலும், காததூரத்தாலும் கிளிவெட்டியில்
பயனளித்ததே கணித / விஞ்ஞான ஆசியனாக - அங்கு
சக ஆசிரியையான பச்சநூரின் சகாயத்தை - தன்
இதயத்தில் இணைத்தே திருமணவாழ்வில் கத்தோலிக்கனாக,
கண்ணியமான வாழ்வில் கிறிஸ்டி முருகுப்பிள்ளையெனும்,
பெயரின் சூட்சுமம் அறிந்தவர்க்கே புரியும்,
திருப்பத்தை விட்டு விட்டு இருதய ஆண்டவரின்
விருப்பத்துக்குள் வந்துவிட்டதே பச்சநூர் 'இருதயபுரமானதே!'

அவர் செய்த புண்ணியமோ, ஆண்டவரின் புதுமையோ,
நாட்டில் ஏற்பட்ட இடப்பெயர்வும், அனர்த்தங்களும்
அவரில்லத்துக்கு எம்மையும் அழைத்துச்சென்றது.
அறுசுவையும், ஆற அமர இடமும் தந்தபோது
வெடித்தது வன்முறை பிடித்தது எமக்கெல்லாம் தலையிடி
கையில் கைக்குழந்தையுடன் தாயை எமது வாகனத்திலும்,
அடம்பிடித்த அன்புமகளை ஒரு கையிலேந்தி
எம்பின்னே துவிச்சக்கரவண்டியில் தனியாளாய்,
கதிரவெளி மட்டும் பயணித்தோம், பிரிந்தோம்.
திசைமாறியது, நிகழ்வுதனை மறக்கமுடியாதென்றாலும்
வாழ்வு வளம் பெற்றதெல்லாம் அதன்பின்புதான்.

மிஞ்சி நின்ற காலத்திலே தன்னைத்தயார் படுத்தி,
பஞ்சமா பாதகங்கள் புரியாவிடினும் பணிவாழ்விலே,
அஞ்சி வாழ்ந்திட்டே தந்திர, சாகச சாதுரியத்தினாலே,
மந்திரப் புன்னகையால் மாந்தரைக் கவர்ந்திட்டே,
அதிபராகி, பணிப்பாளராகி, மாவட்டக்கல்விப் பணிப்பாளராக
உயர்நிலை அடைந்துவிட்டாலும் தன்னிலைமாறாமல்,
கத்தோலிக்க மறை பணிகளிலும், தேடுதலிலும்
ஆர்வமுடன் 'தொண்டன்' சஞ்சிகைக்கும் ஆக்கங்கள்
பல படைத்திட்ட அன்புச் சகோதரன் மட்டுமல்ல - என்
கணவருடன் அனைத்திலும் பயணித்த ஆருயிர் நண்பன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பாடசாலைகளில் கண்காணிப்புக் குழுவினருடன் வரும்வேளை
சுற்றுப்புறச் சூழலின் வளத்தையும் கழிப்பாறைகளின் நலத்தையும்
கண்காணித்தே கற்றல், கற்பித்தல், நடவடிக்கைகளை,
கண்கொண்டு பார்க்கும் பண்பு வேறெந்த அதிகாரிகட்கும்,
அரிதாகவேயிருந்தாலும் இவர் பார்க்கும் பார்வை வேறு,
திருமலையில் உவர்மலையில் "மனை" அமைத்து
அண்டியவர்க்கு ஆறுதலும், தேறுதலும் கூறும்,
அன்பு மனைவி, மக்களுடன் இன்புற்றிருந்தவேளையில்,
ஓர் தடவை எம்மில்லம் வந்து போனார்கள்.
அன்பைப் பொழிந்ததுமல்லாமல் "அன்பே சிவம்" கமல் போல்
ஆகிவிட்டாயே "கைடி" யென நகைச்சுவையுடன் சொன்னார்.



மீண்டும் ஒரு வருடத்துக்குள் "முகநூலில்" முன்னாள்,
அதிபரான "இராசேந்திரம்" ஐயாவின் நூல் வெளியீட்டில்,
சந்தித்தோம், "தொண்டன்" சஞ்சிகை பற்றி பேசினோம்
திருமலையில் ஒரு பத்திரிகை தொடங்கினால் "ஆக்கம் தருவீரா?"
என்றபோதே மாட்டேன், மட்டுநகரில் மட்டுமே எழுதுவேன்"
பிடிவாதமாகக் கூறியதை என்னால் ஜீரணிக்க முடியாதுள்ளது.
ஓய்வு நிலையில் ஒதுங்கி வாழ்ந்தபோதே "மாரடைப்பு" வந்து
அணைத்துக்கொண்டதுவே, கடைசிவரை பார்க்கமுடியாமல் - நானும்
அநுராதபுரம் வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைக்குள்ளானேன்
அண்ணனவனை அஸ்தமனத்திலும் பார்க்கமுடியவில்லையே!

ஆதங்கங்கள் எல்லாம் ஆறாத வடுவாய்
மனத்தாக்கமாய் மனதில் பதிந்துள்ளதே!
மனைவி, மக்கள் குடும்பத்தாருக்கெல்லாம்,
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறேன்.
ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்,
மாண்டார் வருவாரோ மாநிலத்தில்?
இறைஞ்சுகின்றேன் இறைவனிடம் என்றென்றும்
ஆத்மா சாந்தியடையவே!

- பீ. ஐ. கைடிபொன்கலன் -

# தேசிய ரீதியில் வெள்ளிப் பதக்கம்



அகில இலங்கை தமிழ் மொழித்தின தேசியப் போட்டியில் பாவோதல் பிரிவு 04 இல் பங்குபற்றிய கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை மாணவி சிறிதரன் சியாமசங்கவி தேசிய ரீதியில் இரண்டாம் இடம்பெற்று வெள்ளிப்பதக்கத்தினைத் தனதாக்கிக் கொண்டதுடன் பாடசாலைக்கும் கல்முனை கல்வி வலயத்திற்கும் பெருமை தேடிக் கொடுத்துள்ளார்.

இவர் கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையில் க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி கற்கின்றார். பெரிய நீலாவணைக் கிராமத்தைச் சேர்ந்த இம் மாணவியின் தந்தை ஒரு விவசாயி என்பதும் குறிப்பிடத்தக்கது.

- தினகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் தவணை எதிர்நோக்கு முன்னோடிப் பரீட்சை

### விடைகள்

08. இ) - உறுதிப்பூசுதலூடாக திருமுழுக்கில் நாம் பெற்ற இறையருள் ஆழப்படுகிறது, வளர்ச்சியடைகிறது.
- திருச்சபையில் முழுமையான அங்கத்துவம் கிடைக்கிறது.
- கிறிஸ்து இயேசுவோடு இணைக்கப்படுகின்றோம்.
- தூய ஆவியின் கொடைகள் மேலும் வளர்ச்சியடைகின்றன.
- முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவனாக சாட்சிய வாழ்வு வாழத் தூய ஆவியின் விசேட சக்தி கிடைக்கிறது.

09. அ) - பாவங்களுக்காக மனம் வருந்துதல்
- உள்ளத்தில் உருவாகும் துயரம் - செய்த குற்றத்தை வெறுப்பது
- மீண்டும் பாவம் செய்வதில்லை என உறுதியான தீர்மானம் எடுத்தல்.

ஆ) 1. ஆன்ம சோதனையில் ஈடுபடுதல்
2. செய்த பாவங்களுக்காக மனம் வருந்துதல்
3. மீண்டும் பாவம் செய்வதில்லை என உறுதியான தீர்மானம் எடுத்தல்
4. குருவானவரிடம் பாவங்களை அறிக்கையிடுதல்
5. குருவானவர் வழங்கும் பரிகாரத்தை நிறைவேற்றுதல்

இ) 1. செபம் 2. நோன்பு 3. தர்மம்
4. துன்ப துயரங்கள், ஏமாற்றங்களைப் பொறுமையோடு சகித்தல்
5. எவ்வளவு துன்பமாக இருப்பினும் தமக்குத் தரப்படும் பொறுப்புகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுதல்

10. அ) - மீண்டும் இறைவனுடைய அருள் வாழ்வைப் பெறுகின்றோம்.
- இறைவனோடு நெருங்கிய நட்புறவில் இணைகின்றோம்.
- இறைவனோடும், அயலவரோடும் ஒப்புரவாகுவதற்கு இறைவனுடைய முழு வல்லமையைப் பெறுகின்றோம்.

ஆ - மகளே உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று. அமைதியுடன் நீ நோய் நீங்கி நலமாயிரு.

இ) - ஆரம்பச் சடங்கு - பாவமன்னிப்புச் சடங்கு - இறைவார்த்தைச் சடங்கு
- நம்பிக்கையாளர் மன்றாட்டு- தலைமீது கரங்களை வைத்தல்
- நோயாளிமீது தைலத்தால் பூசுதல் - நற்கருணை வழங்குதல்
- ஆசீர் வழங்குதல்

11. அ) - உண்மையான மனம் வருந்துதல் என்பது அனைத்திற்கும் மேலாக இறைவனை அன்பு செய்து அன்பின் காரணமாக ஏற்படும் மனம் வருந்துதலாகும்.
- பயத்தினால் மனம் வருந்துதல் என்பது விண்ணக வாழ்வை (இறையரசை) இழந்து நரகத்தின் வேதனைகளுக்கு உள்ளாக நேரிடும் என்னும் பயத்தினால் மனம் வருந்துதல் எனப்படும்.

ஆ) - நோயினால் அல்லது வயோதிபத்தினால் ஏற்படும் வேதனைகளைக் கிறிஸ்தவ பண்புடன் ஏற்றுக்கொள்ளத் தேவையான சக்தி, அமைதி, திடம் கிடைக்கிறது.
- நோயாளியின் பாவங்களுக்கான மன்னிப்பை இவ்வருளடையாளத்தின் மூலம் பெறுபவர்.
- நோயாளியின் ஆன்ம ஈடேற்றத்திற்கு நன்மை விளையுமாயின் உடல் நலமடைதல்.
- நித்திய வாழ்வை நோக்கிக் கடந்து செல்ல ஆயத்தம் செய்தல்.
- நோயாளியின் நம்பிக்கைக்கும் எதிர்நோக்கிற்கும் ஊட்டமளித்து வாழ்க்கையில் முன்னோக்கிச் செல்ல உதவுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**(சரியான விடையைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

1. யோனத்தான் தம் கைகளாலும், கால்களாலும் ஊர்ந்து மேலே செல்ல, அவர்தம் ........................ தாங்குவோன் அவருக்குப் பின் வந்து அவர்களைக் கொன்றான். இவர்கள் இருவரும் நடத்திய முதல் தாக்குதலில் ஏறக்குறைய இருபது பேர் வீழ்ந்தனர்.

   அ) படைக்கலன்களை ஆ) படைக்கருவிகளை இ) அம்பறாத்தூணியை

2. அப்பொழுது பாளையத்திலும், நிலவெளியிலும் மக்கள் அனைவரிடத்திலும் ........................ ஏற்பட்டது. எல்லைக் காவலர்களும், கொள்ளையிடுவோரும் நடுங்கினர். நிலமும் நடுங்கிற்று. அது ஆண்டவரால் ஏற்பட்ட நடுக்கமாக இருந்தது.

   அ) பயம் ஆ) அச்சம் இ) நடுக்கம்

3. பென்யமின் பகுதியிலுள்ள கிபயாவில் இருந்த சவுலின் சாமக்காவலர் பெலிஸ்தியர் கூட்டம் இங்குமங்கும் சிதறி ........................ விட்டதைக் கண்டனர். சவுல் தம் ஆள்களிடம், “கணக்கெடுத்து நம்மைவிட்டுச் சென்றவர் யார் என்று பாருங்கள்” என்றார்.

   அ) உடைந்து ஆ) கரைந்து இ) இடிந்து

4. அவர்கள் கணக்கெடுத்தபோது, யோனத்தானும், அவர் தம் படைக்கலன்களைத் தாங்குவோனும் இல்லை என்று கண்டனர். பிறகு சவுல் அகியாவை நோக்கி, “கடவுளின் ........................ கொண்டுவா” என்றார். ஏனெனில், அது மக்களோடிருந்தது.

   அ) பேழையை ஆ) கூடாரத்தை இ) விரிப்பை

5. குருவிடம் சவுல் பேசிக்கொண்டிருந்தபோது, பெலிஸ்தியரின் ........................ ஏற்பட்ட குழப்பம் மிகுதியாயிற்று. சவுல் குருவிடம் “உன் கையை விலக்கிக்கொள்” என்றார். அதன்பின் அவரும் அவரோடிருந்தவர்களும் போருக்குச் சென்றனர்.

   அ) கூடாரத்தில் ஆ) பாளையத்தில் இ) கூட்டத்தில்

6. பெலிஸ்தியர் ஒருவன் ஒருவனுக்கு எதிராக வாளெடுக்க அவர்களிடையே ........................ அச்சம் ஏற்பட்டது. ஏற்கனவே பெலிஸ்தியரோடு பாளையத்தில் திரிந்த எபிரேயரும் சவுலோடும் யோனத்தானோடும் இருந்தோருடன் சேர்ந்தனர்.

   அ) பெரும் ஆ) கொடிய இ) மாபெரும்

7. எப்ராயிம் மலைநாட்டில் ஒளிந்துகொண்டிருந்த இஸ்ரயேலர் அனைவரும் பெலிஸ்தியர் தப்பியோடுவதைக் கேள்வியுற்று, அவர்களைத் துரத்தித் தாக்கினர். அன்று ........................ இஸ்ரயேலரை விடுவித்தார். போர் பெத்தாவேனையும் தாண்டி நடந்தது.

   அ) இறைவன் ஆ) ஆண்டவர் இ) கடவுள்

8. இஸ்ரயேல் மக்கள் அன்று சோர்வுற்றனர். ஏனெனில், ........................ அவர்களிடம், “நான் என் எதிரிகளைப் பழிவாங்கவேண்டும். ஆகவே, மாலைக்குள் யாராவது உணவுண்டால் அவன் சபிக்கப்பட்டவன்” என ஆணையிட்டுக் கூறினார். எனவே, எவரும் ஏதும் உண்ணவில்லை.

   அ) சவுல் ஆ) சாமுவேல் இ) ஆண்டவர்

9. பின்பு, நாட்டின் மக்கள் ஒரு காட்டினுள் வந்தனர். அங்கே தரையில் தேன் காணப்பட்டது. மக்கள் நுழைந்தபோது தேன் ஒழுகிக்கொண்டிருந்தது. ஆனால் எவனும் ........................ வாயில் வைக்கவில்லை. ஏனெனில், மக்கள் சாபத்துக்கு அஞ்சினர்.

   அ) தன்விரலை ஆ) தன் விரல்களை இ) தன் கையை

10. யோனத்தானுக்கு இந்த ஆணை பற்றித் தெரியாது. ஆகவே, அவர் தம் கோலை நீட்டி, நுனியால் தேன் கூட்டைக் குத்திக் கையில் எடுத்ததை வாயில் வைத்தார். அவர் கண்கள் ........................ . வீரர்களுள் ஒருவன் “இன்று உணவுண்பவன் சபிக்கப்பட்டவன் என்பது உம் தந்தையின் ஆணை” என்றான்.

    அ) இருளடைந்தன ஆ) சிவந்தன இ) தெளிவடைந்தன


**(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவை வளர்ப்போம் - 183

பரிசுப் போட்டி



(பொருத்தமான சொற்களின் கீழ்க் கோடிடுக)

சிறுவர்களுக்கு மட்டும் :
முடிவுத் திகதி :
30.09.2018

1. ஒட்டோ பன்டிலைவ் என்பது உள்ள நாடு:
   (ஜெர்மனி - பிரான்ஸ் - இத்தாலி)

2. சிப்போல் எனும் விமான நிலையம் உள்ள ஐரோப்பிய நாடு:
   (நெதர்லாந்து - அயர்லாந்து - அம்ஸ்டடாம்)

3. யாபேசின் பெரியோர் நாகாசுவிடம் கேட்ட தவணை நாட்கள்:
   (ஆறு நாட்கள் - எட்டு நாட்கள் - ஏழு நாட்கள்)

4. “Presidential Medal of Freedom” எனும் அமெரிக்க உயர் விருது பெற்ற அறிவியலாளர்:
   (ஸ்டீபன் ஹாக்கிங் - பரக் ஒபாமா - அப்துல் கலாம்)

5. ‘அடக்கம் உடையார் அறிஞர், அடங்காதவர் ...........................?’
   (மூடர் - கல்லார் - மூர்க்கர்)

6. “எழுத்தாளன்” எனும் சொல்:
   (ஆக்கப்பெயர் - வினைப்பெயர் - பெயரடை)

பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

..........................................................

**அனுப்பவேண்டிய முகவரி:**
திருவிவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 183
தொண்டன்
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

..........................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# போட்டி முடிவுகள்...

**திருவிவிலியம் கற்போம், அறிவை வளர்ப்போம் - 181,**

பங்கு பற்றியோர் 13 பேர், ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதியோர் 12 பேர்.

## திருவிவிலியம் கற்போம் - 181 விடைகள்

சவுல், எரிபலி, சாமுவேல், ஆண்டவரின், அரசு, கிபயாவுக்கு, அறுநூறு, ஓபிரா, கொல்லன், மண்வெட்டிகளையும்

## அறிவை வளர்ப்போம் - 181 விடைகள்

1. பமீர்
2. ஒப்நதி
3. 78 வருடங்கள்
4. காது
5. அறிவானா?
6. போங்கள்

## பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குருஸ் CRS

போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி II ம் பிரிவில் 200/= பரிசு பெறுவோர்:

* **வரப்பிரகாசம் யனிஷ்கா,**
கடற்கரை வீதி,
களுவாஞ்சிக்குடி - 08.

* **அக்ஷிதா டேனிஷா டெரன்ஸ்,**
26/15, 3ம் குறுக்கு,
இருதயபுரம் மேற்கு,
மட்டக்களப்பு.

* **R. தனுஸ்ரன்,**
32, சித்திவிநாயகர் வீதி,
அமிர்தகழி,
மட்டக்களப்பு.

* **லோ. டனுஸ்ரன்,**
98, விபுலானந்தபுரம்,
மயிலம்பாவெளி,
தன்னாமுனை.

## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 133 முடிவுகள்

**1ம் பரிசு - 400/=**

* **ஜோன் ஜெயராஜ்,**
15/53, 5ம் குறுக்கு,
சின்ன ஊறணி,
மட்டக்களப்பு.

**2ம் பரிசு - 300/=**

* **வைஷ்னி வல்றின்,**
394/36, ஞானசூரியம் சதுக்கம்,
மட்டக்களப்பு.

**3ம் பரிசு - 200/=**

* **I. அம்ஷயன்,**
கண்ணகி வீதி,
அக்கரைப்பற்று - 08.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நெக்குருகும் நினைவலைகள்!



## திருமதி. ஜெயராணி மாணிக்கராஜா

**தோற்றம் : 1944.08.31**

**மறைவு : 2001.08.11**



என்றும் ஓயாத உன் நினைவுகளுடன்,
உங்களது அன்பு நெஞ்சங்கள்
அன்புக் கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

இல.37, புகையிரத குறுக்கு வீதி,
மட்டக்களப்பு.
தொ.பே. 065 - 2222622, 077 5383485

காலமகள் கடத்து
ஞாலமதில் பயணிக்கக்
கனவிலும் நினைக்கவில்லை
காலனவன் பயணம்
கடுகதியாய் கௌவுமென்று ....

வேதனைகள் சோதனைகள்
சொல்லொணா நினைவலைகளை
யாழ் நரம்பின் மீட்டிசைபோல்
இதயவீணை சுரங்கள் கூட்டும் ....

ஆரோகணச் சங்கிலியாய்
ஆதங்கம் அமிழ்ந்து போகும்
மீண்டுவரும் ஆண்டுகளில்
பதினேழு வருடங்கள்
பார்த்திருக்கப் பறந்தனர்காண் ....

என்செய்வோம் எம்முன்னே
எங்களன்னை இல்லையென்று
ஏங்குகிறான் லக்ஷ்மனன்றோ
மலையருவிக் கண்ணீராய்
மனங்கலங்கும் றஞ்சித்தின்
மனக்குறைகள் தீர்த்துவைக்க
மறுமகணம் நீ வாராயோ
என்றிவனும் புலம்புகையில்
சோபினியும் தர்சினியும்
நினைவுகளாய் மலர்தூவி
நித்தமுனைப் பிரார்த்திப்பர் ......

மாணிக்கச் சுடரினிலே
ராஜநாகம் உயிர்வாழும்
ரகசியங்கள் நிறைந்தஞால
என்னவளின் ஒளியினிலே
மாணிக்க ராஜாவாழ
மானசீக ஆசீர்வாதம்
மனம்நிறைக்கக் கொடுத்திடுவாய்
மருமக்கள், பேரமக்கள்
மகிழ்ந்து நிதம் ஒளியூட்ட
உன்ஆசி வேண்டுகின்றோம்
நெக்குருகும் நினைவுகளில் ....
நித்தமும் நீர் வாழ்ந்திடுவீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media